பக்கங்கள்: 16
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆனி 23 சனிக்கிழமை 07.07.2018 | கதிர் 243

**இது ரகசியம் அல்ல!**

கொழும்பின்மூத்த சட்டத்தரணி ஒருவரைச் சந்தித்தேன். சட்டத்துறை தொடர்பான பல விடயங்களைப் பேசினேன். இடையில் வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் நியமனம் தொடர்பானமேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குக் குறித்துப் பேச்சுத் திரும்பியது. பக்கம் 03 >>>

# மாகாணத் தேர்தலுக்கு முன் புதிய அரசமைப்பு வேண்டும்

## சபையில் வலியுறுத்தினார் சம்பந்தன்




கொழும்பு, ஜூலை 07

"மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் புதிய புதிய அரசமைப்பை உருவாக்கவேண்டும். அத்துடன் மாகாண சபைகளுக்கு அதிகபட்ச அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்."

இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்.

மாகாண சபைத் தேர்தல்கள் உரிய காலப்பகுதியில் நடத்தப்படாமை எமக்குக் கவலையளிக்கின்றது. எனவே மாகாணசபைத் தேர்தலை இனியும் தாமதிக்காது உரிய காலத்தில் நடத்துமாறு அரசை வலியுறுத்துகின்றேன் எனவும் அவர் அங்கு குறிப்பிட்டார். பக்கம் 03 >>>

## நாளை சிங்கப்பூர் செல்கிறார் ரணில்



கொழும்பு, ஜூலை 07

சிங்கப்பூரில் இடம்பெறும் 6 ஆவது சர்வதேச நகர மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை பக்கம் 14 >>>

## கிழக்கு தேர்தல் இழுத்தடிப்பு ஜனநாயக உரிமை மீறலாகும்

### சபையில் சுமந்திரன் கண்டனம்



கொழும்பு, ஜூலை 07

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாது தொடர்ந்து இழுத்தடிக்கப்பட்டு வருவதானது ஜனநாயகத்தையும், மக்களின் உரிமைகளையும் மீறும் செயலாகும்.

இவ்வாறு குற்றம் சாட்டி பக்கம் 14 >>>

### நியூயோர்க் ரைம்ஸ் விவகாரம்

## மஹிந்த சபைக்கு வந்து விளக்கமளிக்கவேண்டும்

### பிரதமர் ரணில் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 07

நியூயோர்க் ரைம்ஸ் விவகாரம் குறித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளு பக்கம் 14 >>>

## புதிய தேர்தல் முறையால் சிறுபான்மைக்கு அநீதி

### ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 07

புதிய தேர்தல் முறையால் சிறுபான்மையினருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டியுள்ளார். பக்கம் 14 >>>

## கோட்டைக்குள் படைமுகாம்; எதிர்த்து நாளை ஆர்ப்பாட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 07

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் இராணுவமுகாம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டமொன்று பக்கம் 14 >>>

## விஜயகலாவை விசாரிக்க ஐ.தே.கவில் நால்வர் குழு

கொழும்பு, ஜூலை 07

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனை ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தும் விசாரணைக் குழுவை ஐக்கிய தேசியக் கட்சி நியமித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம், தலதா அத்துக்கோரள, கபீர் ஹாசிம் மற்றும் ரஞ்சித் பக்கம் 14 >>>

## பழைய தேர்தல் முறைமை இனவாதத்தைத் தூண்டும்

### அமைச்சர் பைஸர் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 07

பழைய தேர்தல் முறை இனவாதத்தைத் தூண்டும் வகையில் காணப்படுவதால் பழைய தேர்தல் முறைக்கு இனிமேல் வாய்ப்பில்லை என மாகாண சபைகள் மற்றும் பக்கம் 14 >>>

## விஜயகலாவுக்கு ஆதரவாக குடாநாட்டில் சுவரொட்டிகள்




யாழ்ப்பாணம், ஜூலை 07

இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமா செய்த விஜயகலா மகேஸ்வரனுக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் பக்கம் 14 >>>

## வடக்கு மாகாண சபையால் பயனேதுமே கிட்டவில்லை

### டக்ளஸ் எம்.பி சபையில் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 07

எமது மக்களது துரதிஸ்டம் காரணமாக வடக்கு மாகாண சபை மக்களுக்கு எவ்விதமான பலனையும் பெற்றுக் கொடுக்காமல் வெறும் பதவிகளுக்கான சபையாக மாறியுள்ளது என பக்கம் 14 >>>

## எரிபொருள் விலை உயர்வு செவ்வாயன்றே தீர்மானம்

### நிதி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 07

எரிபொருள்களின் விலைகள் மாற்றம் தொடர்பில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறும் அமைச்சரவையில் தீர்மானிக்கப்படும் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

அமைச்சரவையின் அனுமதி பெறாமல் எரிபொருள் பக்கம் 14 >>>

## ஜனாதிபதியின் செயலாளராக உதய செனவிரத்ன நியமனம்



கொழும்பு, ஜூலை 07

சுற்றுச்சூழல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உதய ஆர்.சென பக்கம் 14 >>>

## எரிபொருள் விலை உயர்வை உடனே தடுத்தார் ஜனாதிபதி

### பழைய விலைக்கே விற்க உத்தரவு



கொழும்பு, ஜூலை 07

எரிபொருள்களைப் பழைய விலைக்கே விற்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள்களின் விலைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்தது. பக்கம் 14 >>>

## பிரிட்டன் தூதுவராகிறார் ஒஸ்ரின் பெர்னான்டோ



கொழும்பு, ஜூலை 07

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான் பக்கம் 14 >>>

காலைக்கதிர் Kalaikkathir



# ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள்; மஹிந்த விசேட அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்!

## நாடாளுமன்றில் நேற்று பிரதமர் தெரிவிப்பு

சமகால அரசால் ஊடகச் சுதந்திரம் உயர்ந்த மட்டத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் அல்லது அழுத்தங்களுக்கு சமகால அரசாங்கம் ஒருபோதும் அனுமதி வழங்காது.

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையில் பிரசுரமான செய்தி தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.



நேற்று நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன, நெத் எவ்.எம் ஊடகத்தின் மீது மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்களை நிறுத்தும்படி எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார்.

நெத் எவ்.எம் வானொலியில் ஒலிபரப்பான ஒரு நிகழ்ச்சி தொடர்பில் பிரதி அமைச்சர் பாலித்த தேவரப்பெரும கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை செய்துள்ளார். இந்த முறைப்பாடு தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இது ஓர் அச்சுறுத்தல் அல்ல என்றும் இது ஒரு முறைப்பாட்டுக்கான விசாரணையாகவே அமைந்துள்ளது என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

### அனர்த்த முகாமைத்துவ அவசர பணிகளுக்கென விசேட படையணி!

அனர்த்த முகாமைத்துவ அவசர பணிகளுக்கென விசேட படையணி ஸ்தாபிக்கப்படவுள்ளது.

ஆசியப் பிராந்தியத்தில் இத்தகைய ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்று இலங்கை ஒரு யோசனையை முன்வைத்துள்ளது.

மொங்கோலியாவிலிருந்து ஆரம்பமாகி, ஆசியப் பிராந்திய நாடுகளை உள்ளடக்கிய அமைப்பாக இது அமைய வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கேபண்டார யோசனை தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற விசேட சர்வதேச கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.



ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் துங் லாய் மார்க் தலைமையிலான தூதுக்குழு மற்றும் கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இடையில் சந்திப்பு இடம் பெற்றது.

அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விடே சந்திப்பின் போது, ஏற்றுமதி துறைக்கான கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான முன்மொழிவொன்றை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தூதுவரிடம் கையளித்தார்.

# வவுனியா மாவட்ட அரச அதிபராக ஹனீபா பதவியேற்றார்

வவுனியா மாவட்டத்தின் புதிய அரச அதிபராக ஐ.எம். ஹனீபா நேற்று பதவியேற்றுக்கொண்டார்.

வவுனியா முன்னாள் அரசாங்க அதிபர் சோமரத்தின விதான பத்திரனவின் தலைமையில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியத்துடன் புதிய அரச அதிபர் வரவேற்கப்பட்டிருந்தார்.

தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வுகளில் நான்கு மதங்களையும் சேர்ந்த மதகுருமார் ஆசிகளை வழங்கியிருந்தனர். இதனையடுத்து முன்னாள் அரசாங்க அதிபர் உரையாற்றிய பின்னர் புதிய அரச அதிபர் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக ஆவணங்களில் கையொப்பமிட்டு ஆரம்பித்திருந்தார்.

இதன் போது முன்னாள் அரச அதிபருடன் வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் தி. திரேஸ்குமார் உட்பட



மாவட்ட செயலக அதிகாரிகள், புதிய அரசாங்க அதிபரின் உறவினர்கள் முன்பு பணியாற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (க -100)

# றெஜினாவின் படுகொலையை கண்டித்து முரசுமோட்டையில் நேற்றுப் போராட்டம்



கிளிநொச்சி முரசுமோட்டை றோ. க வித்தியாலயத்தில் யாழ். சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியைச் சேர்ந்த றெஜினா என்ற பள்ளி மாணவியின் படுகொலையை கண்டித்து கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியைச் சேர்ந்த றெஜினா என்ற பள்ளி மாணவியின் படுகொலையை கண்டித்தும் நாடு முழுதும் இடம் பெறும் பெண்கள் மற்றும் சிறுவர் மீதான வன்கொடுமைகளை கண்டித்தும் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மேற்படி கவனவீர்ப்புபோராட்டம் முரசுமோட்டை றோ. க வித்தியாலயத்தில் ஆரம்பாகி பரந்தன் முல்லை வீதியூடாக முரசுமோட்டை இரண்டாம் கட்டை வரை சென்று அங்கு தொடர்ந்து போராட்டம் இடம்பெற்றது

அமெரிக்கன் மிசன் திருச்சபை கோரக்கன் கட்டு பிரதேச சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் பாடசாலை வளாகத்தில் இந்தப் பேரணி ஆரம்பமானது.

இந்தப் பேரணியில் அருட்தந்தையர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புக்கள், அப்பிரதேச வர்த்தகர்கள், பெண்கள் அமைப்புகளைச் சார்ந்தவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

(க-70)

# விஜயகலாவின் விசாரணை அறிக்கை முடிவடைந்து கிடைத்ததும் நீதியை நிலைநாட்டுவேன்!

## கரு ஜயசூரிய சபையில் தெரிவிப்பு

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் கருத்து தொடர்பில் சட்டமா அதிபர் விசேட விசாரணையொன்றை முன்னெடுத்து வருகின்றார். ஆகையால் விசாரணை முடிவடைந்து அறிக்கை எனக்கு கிடைத்ததும் நீதியை நிலைநாட்டுவேன் என சபாநயகர் கரு ஜயசூரிய சபையில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

விஜயகலா மகேஸ்வரன் தொடர்பாக நான் சட்டமா அதிபரின் அவதானத்திற்கு கொண்டு வந்தேன். இந்நிலையில் இது குறித்து சட்ட மா அதிபரினால் விசேட விசாரணையொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த விடயத்தில் என்னால் சர்வாதிகாரியாக செயற்பட முடியாது. கட்சி தலைவர்களின் அனுமதியுடனே நான் எனது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றேன். ஆகவே சட்ட அதிபரின் விசாரணை முடிவடைந்து அறிக்கை கிடைக்கபெற்றதும் நீதியை நிலைநாட்டுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நந்திக்கடல் பிரதேசத்தை நம்பி வாழும் 10 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதார பாதிப்பு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதா?

## அமைச்சர் சரத் பொன்சேகாவிடம் டக்ளஸ் எம்.பி கேள்வி!

நந்திக்கடல் பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அதனை இயற்கை ஒதுக்கிடமாக அடையாளப்படுத்துவதன் ஊடாக அதனை நம்பி வாழ்ந்து வருகின்ற சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதா? என அமைச்சர் சரத் பொன்சேகாவிடம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்

நாடாளுமன்றில் நேற்றைய தினம் நடைபெற்ற கேள்வி நேரத்தின்போது பிரதேச அபிவிருத்தி, நிலைபேறு அபிவிருத்தி மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சர் சரத் பொன்சேகாவிடம் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டமனது தொடர்ந்து வறுமை நிலையில் இருந்து வருகின்ற நிலையில், சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் வகையில் முன்னாள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சராக இருந்த மஹிந்த அமரவீரவிடம் நான் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க நந்திக்கடல் ஆற்றுப்பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு கடந்த வரவு – செலவுத் திட்டத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

மேற்படி நந்திக் கடலாற்றினை அபிவிருத்தி செய்வதன் ஊடாக சுமார் 10 ஆயிரத்திற்கும் மேலான கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு தங்களது வாழ்வாதாரங்களை ஈட்டிக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகையதொரு நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல், வட்டுவாகல் மற்றும் நாயாறு போன்ற பகுதிகளை இயற்கை ஒதுக்கிடமாக அடையாளப்படுத்துவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. அந்தவகையில் நந்திக்கடல், வட்டுவாக்கல் மற்றும் நாயாறு போன்ற பகுதிகளை இயற்கை ஒதுக்கிடமாக அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா?

நந்திக்கடல் பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் ஏற்கனவே நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அதனை இயற்கை ஒதுக்கிடமாக அடையாளப்படுத்துவதன் ஊடாக அதனை நம்பி வாழ்ந்து வருகின்ற சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதா?

இயற்கை ஒதுக்கிடமாக மேற்படி பகுதிகள் அடையாளப்படுத்தப்படுமானால் எமது மக்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படும் என்பதால், மேற்படித் திட்டத்தினை கைவிட்டு, எமது மக்களது வாழ்வாதாரங்களுக்கு பாதிப்புகள் ஏற்படாத வகையில் திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க முடியுமா? என்பதுடன் மேற்படி கேள்விகளுக்கான பதில்களையும், எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பான விளக்கங்களையும் அமைச்சர் சரத் பொன்சேகா வழங்குவார் என எதிர்பார்க்கின்றேன் என்றும் டக்ளஸ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

(க)

# தனியாரால் கையகப்படுத்தப்பட்ட சனசமூக நிலையக் கட்டடம் மீட்பு



யாழ்ப்பாணம், ஜூலை 07

கோப்பாயில் நீண்டகாலமாக தனியார் ஒருவரின் கையகப்படுத்தலில் இருந்த வடகோவை நாவலர் சபாபதி சனசமூக நிலையம் மீளவும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முயற்சியால் மீள இயங்க வைக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேசத்தில் 1953ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வடகோவை நாவலர் சபாபதி சனசமூக நிலையமே, கடந்த ஒரு வருடமாக தனியார் ஒருவரின் பிடியில் இருந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் இயங்க வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சனசமூக நிலையத்தின் வளாகத்தை அயலில் உள்ள ஆலயக் குருக்கள் ஒருவர் தனது ஆலயத்துக்குச் சொந்தமான காணி என ஆவணங்களைத் தயாரித்து கொங்கறீட் தூண் வேலியிட்டிருந்தார்.

இந்நிலையில், இவ் விடயம் தொடர்பாக கடந்த வருடமே வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் செயலாளருக்குகவனத்திற்கு சனசமூக நிலைய்த்தினரால் கொண்டு வரப்பட்டிருந்தது.

தொடர்ச்சியாக பிரதேச சபை உறுப்பினர்களால் சபையின் கூட்டத்தொடரில் விவாதிக்கப்பட்டமைத் தொடர்ந்து தவிசாளர் காணியைக் கையகப்படுத்தியிருந்த நபரிடமும் சபையின் ஆவணங்களிலும் ஆவணங்களைக் கோரி ஆராய்ந்திருந்தார்.

இதன்போது, அந்த சனசமூக நிலையத்தின் ஆதனம் பிரதேச சபைக்குரியது என சோலை வரி இடப்புக்களில் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது காணியினை உரிமை கோருபவர் வெளிப்படுத்தல் உறுதி ஒன்றினை கொண்டுள்ளமையும் தெரிய வந்தது. இவற்றைத் தொடர்ந்து சபையில் விவாதிக்கப்பட்டு, சனசமூக நிலையத்தை மீளவும் திறந்து சனசமூக நிலையத்தினரின் நிர்வாகம் மற்றும் பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப இயங்கவைக்க தீர்மானம் எடுக்கப்பட்டது.

இத் தீர்மானத்தின் பிரகாரம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையிலான பிரதேச சபை உறுப்பினர்கள், சனசமூக நிலைய இளைஞர்கள், மக்கள் எனப் பலதரப்பட்டவர்களும் இன்று வெள்ளிக்கிழமை காலை காணி யினுள் நுழைந்து சம்பிரதாய பூர்வமாக சனசமூக நிலையத்தினை ஆரம்பித்து வைத்தனர். (ஐ)

# காணாமற்போன உறவுகளின் போராட்டம் 500 ஆவது நாளில்

காணாமற்போனோரின் உறவுகள் தமது உறவுகளை மீட்டுத் தர வலியிறுத்தி வவுனியாவில் முன்னெடுத்து வரும் போராட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமையுடன் ஐநூறாவது நாளை எட்டவுள்ளது.

இதனை முன்னிட்டு இன்று யாழ்ப்பாணத்தில் அடையாள உண்ணாவிரதப் போராட்டமும் நல்லூர்க்கந்தன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன.

நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு முன்பாக இன்று காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இப் போராட்டத்தில் நல்லூர்க் கந்தன் ஆலய மதியநேர பூசையின் போது 108 தேங்காய் உடைத்து 50 தீச்சட்டிகளும் எடுக்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெறும். (ஐ-7)

# மாடு வெட்டியவர் கைது

வவுனியா, ஜூலை 07

வவுனியாவில் சட்டவிரோதமான முறையில் வீடு ஒன்றில் மாடு வெட்டி இறைச்சியாக்கி விற்பனை செய்வதற்கு முயன்ற ஒருவரை நேற்றுக் கைது செய்துள்ளதாக வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 7 மணியளவில் பட்டக்காடு பள்ளிவாசலுக்கு முன்பாக உள்ள வீதியில் வீடு ஒன்றில் சட்டவிரோதமான முறையில் மாடுகள் அறுத்து விற்பனை செய்யப்பட்டு வருவதாக வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப் பிரிவினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதனை அடுத்து அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்து மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது சட்டவிரோதமான முறையில் மாடு வெட்டிய சந்தேக நபர் இறைச்சியுடன் பொலிஸாரால் கைது செய்ப்பட்டார். இந்தப் பகுதியில் தொடர்ச்சியாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் மாடு வெட்டப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றமையும் தெரியவந்துள்ளது. இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-100)

# உடுவிலில் 3 வீடுகளுக்குள் புகுந்த கும்பல் அட்டூழியம்

சுன்னாகம் பொலிஸ் பிரிவுகுட்பட்ட உடுவில் மல்வம் பகுதியில் உள்ள 3 வீடுகளுக்குள் புகுந்து கும்பல் ஒன்று அடாவடியில் ஈடுபட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

3 மோட்டார் சைக்கிள்களில் 9 பேர் கொண்ட கும்பல் வீடுகளுக்குள் புகுந்தது. அவர்கள் முகமூடி அணிந்திருந்தனர். நீளமான வாள்கள், பொல்லுகள் மற்றும் கம்பிகளை அவர்கள் வைத்திருந்த்னர் என்று முறைப்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வீடு ஒன்றின் வளவுக்குள் புகுந்து கும்பல், முற்றத்தில் நிறுத்திவைக்கபட்டிருந்த ஓட்டோவை அடித்துச் சேதப்படுத்தியது. அந்த வீட்டுக்குள்ளிலிருந்த கதிரைகள், யன்னல் க்ண்ணாடி போன்றவற்றை அடித்து உடைத்தது தப்பிச் சென்று விட்டது முறைப்பாட்டாளர் ஒருவர் கூறினார்.

கும்பலுக்கும் குடும்பம் ஒன்றுக்கும் இடையே நீடித்த காதல் விவகாரத்தால் எழுந்த முரண்பாட்டை அடுத்தே இந்த வன்முறை இடம்பெற்றுள்ளது. சம்வத்தையடுத்து சந்தேகத்தின் அடிப்படையில் மூவர் கைது செய்யப்பட்டனர். (ஐ)

## மாகாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று மாகாணசபைத்தேர்தல் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்–

உரிய நேரத்தில் தேர்தல்களை அரசு நடத்தவில்லை. இது அரசின் ஜனநாயகப் போக்கு மீதான கேள்வியை எழுப்புகின்றது. மாகாணசபை தேர்தலை உரிய நேரத்தில் நடத்தாமை காரணமாக ஜனநாயகத்தை அரசாங்கம் எவ்வாறு கையாள்கின்றது என்ற சந்தேகம் எழுகிறது. ஆக்வே தேர்தல் உரிமையை நிலைநாட்டவேண்டும். அதன் மூலம் மக்களின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவேண்டும்.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் மிக நீண்டகாலமாக கலந்துரையாடி வருகின்றோம். அதிகாரப் பகிர்வு வேண்டும் என்று மக்கள் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றனர்.

1920களில் இருந்தே இந்தக் கோரிக்கைகள் எழுந்தன. அது இப்போது நூறு ஆண்டுகளை கடக்கும் நிலையில் இதுவரை அதற்கான தீர்வு கிட்டவேயில்லை.

நாட்டைப்பிரிக்காது இணைந்து ஐக்கியமாக நாட்டை வழிநடத்திச் செல்லவேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பு. இந்நிலையில் எமக்கான ஓர் உண்மையானதும் நம்பகமானதுமான அதிகாரப் பகிர்வை இதுவரை நாம் உருவாக்கவில்லை.

கடந்த 1987–1988 களில் இருந்து மக்களின் குரலை அழுத்தமான குரலாக அவதானிக்க முடிந்தது. ஜே.ஆரின் ஆட்சியில் அதன் பின்னர் பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்தபோது 13ஆவது திருத்தம் குறித்து முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்லும் அதிகாரப்பகிர்வு குறித்தும் பேசப்பட்டது. மக்களின் ஜனநாயகம் பலமடைய அதிகாரப்பகிர்வு அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டது. மங்கள முனசிங்க குழுவின் அறிக்கையை அவதானித்தால் அதன் உண்மைத்தன்மை தெரியும். 13 ஆம் திருத்தத்துக்கு அப்பால் சென்று செயற்படவேண்டும் என்றநோக்கம் அன்றே இருந்தது என்பதை அவதானிக்க முடியும்.

அதன் பின்னர் 1994ஆம் ஆண்டு சந்திரிக்கா குமாரதுங்கவின் ஆட்சியில் இந்தக் கோரிக்கைகள் மீண்டும் வலியுறுத்தப்பட்டு 1997 ஆம் ஆண்டு சில பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. அரசமைப்புச் சீர்திருத்தம் அவசியம், அதில் அதிகாரப் பகிர்வின் முக்கியத்துவம் என்பன சுட்டிக்காட்டப்பட்டன. அப்போது மஹிந்த, மைத்திரிபால போன்ற அமைச்சர்கள் அந்தயோசனையை ஏற்றுகொண்டனர். 2000 ஆம் ஆண்டு பிரேரணையும் முன்வைக்கப்பட்டது.

மஹிந்தவின் ஆட்சியிலும் சர்வகட்சிக் குழு அமைக்கப்பட்டு அதிகாரப் பகிர்வு நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அதியுச்ச அதிகாரப்பகிர்வு வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த ஆட்சியிலும் ஆரம்பம் முதற்கொண்டு அதே நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டுவருகின்றது. ஆகவே இதுவரை காலமாக இருந்த சகல ஜனாதிபதிகளும் இப்போதைய ஆட்சியாளர்களும் அதிகாரப் பகிர்வு அவசியம் என்ற நிலைப்பாட்டில் இருந்துள்ளனர். ஆயினும் இந்த முயற்சிகள் ஏன் வெற்றி பெறவில்லை என்பது புதிராகவே உள்ளது.

பிரிபடாத நாட்டுக்குள் அரசமைப்பின் மூலமாக அதிகாரப் பகிர்வுஒன்றைப்பெற்றுக்கொண்டு அதன் மூலமாக சமத்துவத்துடன் வாழவேண்டும் என்பதையே நாம் வலியுறுத்தி வருகிறோம். இதுவரை காலமாக நாம் விட்ட தவறுகளைத் திருத்திக்கொள்ள இது சரியான ஒரு சந்தர்ப்பமாகும்.

கடந்த கால தவறுகளில் இருந்து படிப்பினையை பெற்றுக்கொண்டு அடுத்த கட்ட ஆரோக்கியமான நகர்வுகளை நாம் முன்னெடுக்கவேண்டும். புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்காமல்விட்டால் நாட்டுக்கு விடிவு கிடையாது.

ஆகவே மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் – என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கின் விடயங்களையும் இடைக்கால உத்தரவின் விவரத்தையும் தெரிவித்தேன். எல்லாவற்றையும் செவிமடுத்த பின்னர் ஒரு தகவல் சொன்னார்.

*"இந்தப் பிரச்சினையை ஒரே நாளில் தீர்த்து விடலாம். ஏன் இழுபட விடுகின்றார்கள்?"*–என்று ஏளனமாகக் கேட்டார் அவர்.

"அதெப்படி?"–என்று கேட்டேன்.

"சுலபம்" – என்றார் அவர்.

*''வழக்குத் தொடுத்தவர் டெனீஸ்வரன். தமது அமைச்சர் பதவியை நீக்கிய முறைமை சட்டரீதியானது அல்ல என்பதுதான் அவர் தரப்பின் வாதம். அதில் விவாதித்துக் கொண்டிருந்தால் இந்த வழக்கு இன்னும் பல மாதங்கள் இழுபட்டுக் கொண்டிருக்கும். சபையின் ஆயுள்காலம் முடிந்தும் வழக்குத் தொடரும். இடைக்கால உத்தரவும் நீடிக்கும். டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்கின்றமையைத்தடுப்பதும் உடனடியாகச் சாத்தியமாக இருக்காது. ஆகவே இருப்பது ஒரே வழிதான். அடுத்த தவணைக்காக வழக்கு எதிர்வரும் திங்களன்று கூப்பிடப்படும் அல்லவா? அன்றைய தினம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜராகும் முதலமைச்சரின் சட்டத்தரணி, இந்த வழக்கில் மனுதாரான டெனீஸ்வரனின் தரப்புக் கோரிக்கைகளை நிராகரிக்கவில்லை, அவர் பதவி நீக்கப்பட்டமை சட்டரீதியற்றது என மனுதாரரின் கோரிக்கையைத் தாங்களும் அங்கீகரிக்கின்றனர் என்று தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவித்தால் வழக்கெழு காரணம் தீர்க்கப்பட்டு விடும். வழக்கு சுமூகமாகத் தீர்க்கப்பட்டதாக நீதிமன்றம் அறிவிக்கும் இடைக்காலத் தடை உத்தரவும் செயலிழக்கும்.*

*"அப்படி இணக்க நிலை வந்து, பிரச்சினை சுமூகமாகத் தீர்க்கப்பட்ட பின்னர், அடுத்த நாளோ, அடுத்த வாரமோ தன் இஷ்டப்படி தனது அமைச்சரவையை முதல்வர் மாற்றியமைக்கலாம். ஆனால் இம்முறை சட்டப்படி ஆளுநருக்குப் பரிந்துரைத்து, வர்த்தமானியில் அதை அறிவித்து முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால் இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துவிடலாம். தமக்குப்பிடித்தம் இல்லாத டெனீஸ்வரன் பதவியில் தொடர்கின்றமையையும் முதல்வர் தடுத்து விடலாம்.*

*"ஆனால் அதில் ஒரேயொரு சிக்கல்தான் இருக்கின்றது. முன்னர் டெனீஸ்வரனைத் தாம் பதவி விலக்கிய முறைமை தவறானதுதான் என நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டு, அந்தப் பிரச்சினையில் மேலதிக சட்ட வாதங்களையும், காலநேர இழுபறியையும் முடிவுக்குக் கொண்டு வர முதலமைச்சர் தரப்பு இணங்க வேண்டும். அப்படி வருவதற்கு மனுதாரர் தரப்பு 'ஈகோ' விடுமா என்பது எனக்குத் தெரியவில்லை.*

*''அதுவும் எதிர்மனுதாரர் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனும் ஓர் உயர்நீதிமன்ற நீதியரசர். அவரது சட்டத்தரணியான கனகேஸ்வரனும் சட்டத்துறையில் கொடிகட்டிப் பறக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி. இருவரின் நிலைப்பாடுகளும் அப்படி ஒப்புக் கொள்ள இடமளிக்குமா என்பது தெரியவில்லை.*

*"அப்படி இணங்கிப் போகாமல் – விட்டுக் கொடுக்காமல் சட்டரீதியாக மோதியே தீருவோம், ஒருகை பார்ப்போம், என – முதல்வர் தரப்பு பிடிவாதமாக இருக்குமானால், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால தீர்ப்பு விலக்கப்படும் வரை – அல்லது மேனிலை நீதிமன்றம் ஒன்றினால் இடைநிறுத்தப்படும் வரை – டெனீஸ்வரன் அமைச்சராகச் செயற்படுகின்றமையைத்தற்போதைக்கு தடுப்பது கஷ்டமே!''* என்றார் அந்த மூத்த சட்டத்தரணி.

முதல்வர் தரப்பு என்ன செய்யப் போகின்றது? அவருக்குப் பின்னால்திரண்டிருக்கும் சட்டத்தரணிகள் என்ன ஆலோசனைவழங்கப் போகின்றார்கள்? எல்லாம் நாளை மறுதினம்திங்களன்றுகொழும்பில் மேன் முறையீட்டுநீதிமன்றத்தில் தெளிவாகி விடும்.

-மின்னல்-

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தமிழரின் பாதை மாற்றத்தை அறிவிக்கும் நேரம் நெருங்குகிறது

இந்த நாட்டின் தேசிய இனப்பிரச்சினை கடந்த எழுபது ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் தொடர்ந்து இழுபடுகின்றது.

அதனைத் தீர்ப்பதற்கு அவ்வப்போது முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டனவாயினும் அவை எவையும் எந்தச் சமயத்திலும் பூர்த்தி செய்யப்படவில்லை.

ஒவ்வொரு தடவையும் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகள் தென்னிலங்கையில் இருக்கும் தீவிரப் போக்கு சக்திகளால் முறியடிக்கப்படும். இதுவே இலங்கையின் காலாதி கால சரித்திரமாக இருக்கின்றது.

பிணக்கைத் தீர்த்து, இணக்கத் தீர்வை எட்டுவதற்காக ஒவ்வொரு தடவையும் இணங்கி – இறங்கி – போகும் சிறுபான்மையினரான தமிழர்கள், பெரும்பான்மையினர் என்பதனால் ஆட்சியதிகாரத்தை வைத்திருக்கும் சிங்களவர்களிடம் ஏமாந்து, தோற்றுப் போவதே இறுதியில் ஒவ்வொரு தடவையும் வரலாறாக இருந்து வருகின்றது.

இந்தப் பட்டறிவு காரணமாக – துன்பியல் அனுபவம் காரணமாக – தீர்வுக்கான தமது போராட்டங்களையும் வழிமுறைகளையும் வேறு வழியின்றி வெவ்வேறு விதமாக மாற்றி வந்திருக்கின்றார்கள் தமிழர்கள்.

முதல் 35 வருடங்கள் காந்தீய நெறியில் – அஹிம்சை மார்க்கத்தில் – வன்முறையற்ற அறவழிப்பாதையில் போராடினர் தமிழர்கள்.

நீதியான தீர்வும், கௌரவமான வாழ்வும் வேண்டி தமிழர் தேசம் நடத்திய போராட்டங்கள் எல்லாம் தென்னிலங்கை அரசுகளால் ஆயுதமுனையில் மிக மோசமாக அடக்கப்பட்டன.

காந்தீய மார்க்கத்தின் உயரிய பண்பியல்புசார், அறநெறி உணராத தென்னிலங்கை அரசுகளுக்கும் ஆட்சியாளர்களும் எஞ்ஞான்றும் புரியப் போவதில்லை என்ற யதார்த்தத்தை – உண்மையை – தமிழர் தேசம் புரிந்தபோது, வேறு வழியின்றி தங்களுக்கு நியாயத் தீர்வு கிட்டுவதற்காக ஆயுதம் தூக்க வேண்டிய நிலைக்கு அது தள்ளப்பட்டது.

தமிழ் மக்களின் நியாயமான – அறவழிப்பட்ட – போராட்டங்களை தனது படைகளின் கொடூர நடவடிக்கைகள் மூலம், ஆயுத முனையில் தென்னிலங்கை அடக்க முற்பட்டபோதே தமிழரின் உரிமைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பியது.

அதன் விளைவை இந்த இலங்கைத் தீவு இரண்டரை தசாப்த காலம் அனுபவித்தது. இந்தத் தீவு எங்கும் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது. தமிழர் தேசம் மட்டுமல்ல, சிங்களவர் தேசமும், குருதியில் தோய்ந்தது.

இறுதியில், மிகத் தீவிரமான – மோசமான – அப்பட்டமான – யுத்தக் குற்றங்களைப் புரிந்து, பல்லாயிரம் தமிழர்களை மனித குலத்தின் மாண்புகளுக்கு மாறாக கொன்றொழித்து, பிரளயம் போன்ற வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு, தமிழரின் ஆயுதப் போராட்டத்தை நசுக்கியது இலங்கை அரசுப்படை.

அத்தகைய கொடூரத்தைப் புரிந்த பின்னரும் கூட, இலங்கை தன்னைத் திருத்திக் கொள்ளவில்லை.

கொடூரப் பட்டறிவுகளின் பின்னரும் மென்வலு முறைமைகள் மூலம் இலங்கை அரசுடன் ஊடாடித் தீர்வு காண விழைந்தது தமிழர் தலைமை.

அந்தத் தலைமையும் மீண்டும் ஏமாற்ற நிலைமைக்கு வந்து விட்டது என்பதை அதன் தலைவர் தொடர்ந்து வெளியிட்டு வரும் கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

நல்லாட்சி அரசு, நம்பிக்கை வைத்த தமிழர்களை நட்டாற்றில் விட்டுவிட்டது என்பதை அந்த அரசின் உள்நாட்டலுவல்கள் அமைச்சரையும், வெளிவிவகார அமைச்சரையும் மேடையில் வைத்துக்கொண்டு பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.

இதே கருத்தை கடந்த செவ்வாயன்று கொழும்பில் தம்மைச் சந்தித்த இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி டெரன்ஸ்டி ஜோன்ஸிடம் நேரடியாகத் தெரிவித்திருந்தனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களான இரா.சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும்.

இப்போது நேற்றுமுன்தினம் மீண்டும் அக்கருத்தை அமெரிக்கத் தூதுவரிடம் அவர்கள் எடுத்துரைக்கின்றனர். இலங்கையில் தமது பணியை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பும் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஸாப்பிடம் இந்த விடயத்தை எடுத்துரைத்த சம்பந்தன், அதற்கு அப்பாலும் ஒரு விடயத்தைக் குறிப்பிடத் தவறவில்லை.

“தமிழர்களின் கோரிக்கைகள் மிகவும் நியாயமானவை. இலங்கை அரசு இவற்றை நிறைவேற்ற முடியாமல் போகும் பட்சத்தில் தமிழ் மக்கள் ஒருபோது இரண்டாம் தரப் பிரஜைகளாக இந்நாட்டில் வாழ இணங்க மாட்டார்கள்.” – என்று தெளிவாக எடுத்துரைத்திருக்கும் சம்பந்தன், தீர்வு வழங்கப் படாவிட்டால் – மீண்டும் ஏமாற்றப்பட்டால் – தமிழினம் எடுக்கப் போகும் நடவடிக்கை அல்லது நாடப் போகும் வழி யாது என்பதைக் கோடி காட்டவில்லை.

“வடக்கு – கிழக்கு உள்ளடங்கலாக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் பெரும்பான்மையான தமிழ் மக்கள் பிரிபடாத – பிரிக்க முடியாத – இலங்கை நாட்டுக்குள்ளேயே தீர்வை ஒன்றை எதிர்பார்க்கப்படுகின்றார்கள். ” – என்றும் மீண்டும் வலியுறுத்தும் சம்பந்தன், தீர்வு வழங்கப்படாவிட்டால், தமிழினம் நாடப்போகும் மாற்று வழி – மார்க்கம் – எது என்பதைப் பகிரங்கப்படுத்த வேண்டிய நேரம் நெருங்கி வருவதாகவே தோன்றுகின்றது.

# நிலையற்ற அரசியல் தலைமைத்துவமே வடக்கின் சமூக சீர்கேடுகளுக்கு காரணம்

### நாடாளுமன்றில் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 07

எமது பகுதியில் தினந்தோறும் நடந்தேறி வருகின்ற சமூகச் சீர்கேடுகளுக்கு நிலையற்ற – கொள்கையற்ற தலைமைத்துவமே காரணமாக இருக்கின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக் காட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல் மற்றும் தேர்தல் முறைகள் பற்றிய சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

எமது பகுதியில் தினந்தோறும் நடந்தேறி வருகின்ற சமூகச் சீர்கேடுகளுக்கு நிலையற்ற – கொள்கையற்ற தலைமைத்துவமே காரணமாக இருக்கின்றது. எமது மக்களுக்கான தலைமைத்துவம் என்பது எமது மக்களை நேர்வழிப்படுத்தி, முன்னேற்றப் பாதையில் எமது மக்களை அழைத்துச் செல்வதாக இருத்தல் வேண்டும். எமது மக்களுக்கான நேரிய வழியினை வகுத்துக் கொடுப்பதற்காகவே நாம் அரசியல் பிரவேசம் செய்துள்ளோம். எனினும், போதிய அளவு அரசியல் பலம் இல்லாத காரணத்தால் எம்மால் முழுமையாக செயற்பட இயலாதுள்ளதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

இருப்பினும், எங்களுக்கு கிடைத்துள்ள அரசியல் அதிகாரங்களை நாங்கள் எமது மக்களுக்காகவே பயனுள்ள வகையில் பயன்படுத்தி வருகின்றோம். இதனை எமது மக்கள் உணர்ந்து வருவதாலேயே எமக்கான அரசியல் பலம் என்பது அதிகரித்துவர ஆரம்பித்துள்ளது.

எனவேதான், வடக்கு மாகாண சபையின் தற்போதைய ஆட்சிக் காலம் நிறைவுற்றதன் பின்னர் உடனடியாக வடக்கு மாகாண சபைக்கான தேர்தலைத் துரிதமாக நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைத்து வருகின்றோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மாகாண சபையின் தேர்தல்களைப் புதிய முறைமையின் கீழ் நடத்த வேண்டுமானால், அது தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற ஒரு நிலை காணப்படுகின்றது. எனவே, இத்தகைய காரணத்தைக் காட்டி பிற்போடாமல், புதிய தேர்தல் முறைமையில் உடனடித் திருத்தங்களை மேற்கொண்டோ, அல்லது பழைய முறையில் திருத்தங்களை மேற்கொண்டோ உடனடியாக மாகாண சபை தேர்தல்களை நடத்தி முடிப்பது சிறந்த வழியாகும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்த விரும்புகின்றேன்.

அந்த வகையில், குறிப்பாக, கிழக்கு மகாண சபையின் ஆட்சி அதிகாரம் இன்னும் ஆளுநர் கைகளிலேயே தொடர்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தற்போது ஆளுநர்களது கைகளில் ஆட்சியதிகாரங்கள் உள்ள ஏனைய அனைத்து மாகாண சபைகள் உள்ளிட்ட, இந்த வருடத்திற்குள் உத்தியோகப்பூர்வ ஆட்சி நிர்வாக காலம் முடிவடைகின்ற ஏனைய மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை விரைந்து நடத்தி அவற்றின் நிர்வாகங்களை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்–என்றார். (ஐ)

# தொழிலாளர் விடயத்தில் சகலரும் ஒரே நிலைப்பாடு

### முத்தரப்புப் பேச்சில் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 07

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில், இம்முறை ஒரே நிலைப்பாட்டில் இருப்பதற்கு, கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் மூன்று தொழிற்சங்கங்களும் ஒன்று கூடி நேற்றுத் தீர்மானித்துள்ளதுடன், தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக, உப குழு ஒன்றையும் அமைத்துள்ளன.

இதேவேளை, எதிர்வரும் 13 ஆம் திகதி மீண்டும் ஒரு பேச்சில் ஈடுபடுவதற்கு மூன்று தொழிற்சங்கங்களும் தீர்மானித்துள்ளன.

கடந்த 2016 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம், எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துடன் நிறைவடையவுள்ளது.

இந்நிலையில், தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காக, ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் மூன்று தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான பேச்சு பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கத்தின் அமைச்சில் நேற்று நடைபெற்றது.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸின்தலைவருமான ஆறுமுகன் தொண்டமானின் அழைப்பின் பேரில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் யூனியன் சார்பாக பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மேற்படித் தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ், பெருந்தோட்டத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எஸ்: இராமநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# இலஞ்சம் பெற்ற அதிகாரிக்கு 40 ஆண்டு சிறைத் தண்டனை

### கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஜூலை 07

வீதிப் போக்குவரத்து உரிமம் வழங்குவதற்காகத் தனியார் பஸ் உரிமையாளர் ஒருவரிடம் இலஞ்சம் பெற்றுக் கொண்டமை உள்ளிட்ட 08 குற்றங்களில் குற்றவாளி யாக இனம்காணப்பட்ட மேல் மாகாண சாலைப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் முன்னாள் முகாமையாளருக்கு 40 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க நேற்று இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

இது தவிர பிரதிவாதிக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் மற்றும் அவர் இலஞ்சமாகப் பெற்றுக் கொண்ட 10 ஆயிரம் ரூபாவைத் தண்டனமாகவும் செலுத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் பஸ் உரிமையாளருக்கு 05 இலட்சம் ரூபா நட்ட ஈடும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (ஐ)

# பட்டச் சான்றிதழில் சைட்டம் நீக்கம்

கொழும்பு, ஜூலை 07

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட சைட்டம் மாணவர்களுக்கு வழங்கப்படும் பட்டத்தில் சைட்டம் என்ற பெயரை நீக்கியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு தாமரை தடாகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே, ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

சைட்டம் மாணவர்கள் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்பட்டதில் அவர்களுக்கு வழங்கப்படும் பட்டத்தில் அடைப்புக்குள் சைட்டம் என குறிப்பிடத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் இதற்கு மாணவர்கள் தங்களது எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாளை

07.07.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : பரணி பி.இ.3.38 வரை
திதி : தசமி மு.இ.7.18 வரை
சுபநேரம் : 08.58 – 10.28 வரை
இராகுகாலம் :04.28 – 05.28 வரை

# முதலாவது விசேட மேல்நீதிமன்றின் பணிகள் 14 நாள்களுக்குள் ஆரம்பமாகும்: நீதி அமைச்சர்

கொழும்பு, ஜூலை 07

சர்ச்சைக்குரிய நிதிக் குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்குகளை துரித கதியில் விசாரிப்பதற்கான விசேட மேல் நீதிமன்றத்தின் செயற்பாடுகள் இன்னும் இரண்டு வாரங்களில் ஆரம்பமாகும் என நீதி அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, ஊழல், மோசடியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிப்பு விடுத்துவிட்டே ஆட்சிக்கு வந்தீர்கள். ஆனால், நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. சொல்லில் காட்டும் ஆர்வத்தை இந்த அரசு செயலில் காட்டுவதில்லை.

இந்தநிலையில், விசேட மேல் நீதிமன்றங்கள் மூன்று அமைக்கப்படும் என அறிவிப்பு விடுத்தீர்கள். அதற்கு என்ன நடந்துள்ளது? என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

மூன்று நீதிமன்றங்களில் ஒன்றை அமைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. தேவையான சட்டங்களை இயற்றுதல், வழக்கு விசாரணைகளுக்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளையே நீதி அமைச்சால் செய்யமுடியும். வழக்குத் தொடுப்பதற்குரிய பணியை சட்டமா அதிபர் திணைக்களமே முன்னெடுக்கும்.



சட்டமா அதிபர் திணைக்களத்தில் அதிகாரிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. புதிதாக ஆட்களை இணைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான அனுமதியும் கிடைத்துள்ளது.

மூன்று மேல் நீதிமன்றங்களை அமைப்பது பிரச்சினைக்குரிய விடயமல்ல. கொழும்பு மோட்டார்போக்குவரத்துத் திணைக்களத்தின் போக்குவரத்து நீதிமன்றத்தைப் பிறிதொரு இடத்தில் அமைத்துவிட்டே முதலாவது நீதிமன்றத்தை அமைக்க அந்தக் கட்டடம் பெறப்பட்டது.

இம்மாதம் 4ஆம் திகதி முதலாவது நீதிமன்றம் திறக்கப்படவிருந்தாலும், கூரைகளை மாற்றவேண்டியுள்ளது என்றும், அதைச் செய்த பின்னரே கட்டடம் ஒப்படைக்கப்படும் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இன்னும் இரண்டு வாரங்களில் கட்டடம் ஒப்படைக்கப்படும் என உறுதியளித்துள்ளனர். அதன் பின்னர் பணிகள் ஆரம்பமாகும்.

மூன்று மேல் நீதிமன்றங்களுக்கும் நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை. ஒரு நீதிமன்றத்துக்குரிய நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)


## தமிழ் மொழித் தின தேசிய மட்ட இறுதிப் போட்டி 14, 15 ஆம் திகதிகளில்

### கல்வி அமைச்சு தெரிவிப்பு

அகில இலங்கை தமிழ் மொழித் தின 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 14, 15 ஆம் திகதிகளில் கல்வி அமைச்சிலும், எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது என கல்வி அமைச்சின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் கடந்த வாரங்களில் இடம்பெற்ற தபால் ஊழியர்களின் பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையினால் நிகழ்ச்சி தொடர்பான கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறும் அமைச்சு பாடசாலை அதிபர்களைக் கோரியுள்ளது.

## பெறுமதியான வல்லபட்டைகள் கடத்த முயன்ற மூவர் கைது!



கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக 7 லட்சம் ரூபா பெறுமதியான 82 கிலோ எடையுடைய வல்லபட்டைகளை கடத்த முயன்ற 3 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 2 பேர், நீர்கொழும்பு பகுதியை சேர்ந்த 26 வயதுடையவர்கள் எனவும், இவர்கள் நேற்று முன்தினம் காலை 9.40 மணியளவில் டுபாய்க்கு பயணிக்க இருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களிடம் இருந்து 51 லட்சத்து 46 ஆயிரம் ரூபா பெறுமதியான 61.8 கிலோ எடையுடைய வள்ளபட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, கைது செய்யப்பட்ட மூன்றாவது நபர் நீர்கொழும்பு பகுதியை சேர்ந்த 31 வயதுடையவர் எனவும், நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் இவர் டுபாய்க்கு பயணிக்க இருந்ததார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவரிடம் இருந்து 20 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான 20.75 கிலோ எடையுடைய வள்ளபட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நீள்கரை - 2. பிரதிகள் பற்றிய உரையாடல்

யாழப்பாணம், ஜூலை 07

நீள்கரை ஆற அமர்ந்து பேசுவோம் உடுவில் அரவிந்தனின் 'பாழ்வெளி" ந.மயூரரூபனின் "புனைவின் நிழல்" ஆகிய இரு பிரதிகள் பற்றிய உரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் கலைத்தூது அழகியற் கல்லூரியில் சி.ரமேஷின் வழிப்படுத்தலில் இடம்பெறும். (இ)

## முன்னாள் எம்.பி. காலமானார்!

அம்பாந்தொடை மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி கே இந்திக்க காலமானார்.

தனது 51வது வயதில் அவர் நேற்று முன்தினம் இரவு காலமானார் என குடும்ப உறுப்பினர்கள் தெறிவித்துள்ளனர்.

## பிரபல நாடொன்றின் தூதுவராக ஒஸ்டின் பெர்னாண்டோ?



ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவுக்கு முன்னணி நாடொன்றில் தூதுவர் பதவி வழங்கப்படவுள்ளது என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி செயலாளராக இருந்த ஒஸ்டின் பெர்னாண்டொ, தான் இராஜினாமா செய்யப் போகிறேன் என கடந்த மே மாதம் 11 ஆம் திகதியே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார் என குறிப்பிடப்படுகின்றது. இந்த அறிவித்தலுக்கு ஜனாதிபதி நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளார் என கூறப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி செயலாளர் பி.பீ. அபேகோன் தனது பதவியை இராஜினாமா செய்ததன் பின்னர் கடந்த 2017 ஜூலை 01 ஆம் திகதி ஒஸ்டின் பெர்னாண்டோ நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

புதிய ஜனாதிபதி செயலாளராக வருவதற்கு சிரேஷ்ட நிருவாக சேவை அதிகாரிகள் பலரின் பெயர்கள் தற்பொழுது முன்மொழியப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூலை 07

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை –

**யாழ் பிரதேசத்தில்** – கோம்பயன் மானிப்பாய் வீதி, புது வீதி, ஆறுகால் மடம், பழம் வீதி, காக்கைதீவு, வதிரி, சக்களாவத்தை, துலாக்கட்டு, அல்வாய், திக்கம், இரும்புமதவடி ஆகிய இடங்களிலும்–

**கிளிநொச்சி பிரதேசத்தில்** – தேராவில், இருட்டுமடு, மூங்கிலாறு,உடையார் கட்டு, கைவேலி, சுதந்திரபுரம், தேவிபுரம், வல்லிபுனம், 68வது பிரிவு இராணுவ முகாம், 683வது பிரிவு இராணுவமுகாம், Hidramani Gements, 18 VIR இராணுவமுகாம் ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில்** – கிறிட்டிலிருந்து பட்டாணிச்சூர் வரை, UNHCR குருமன்காடு, மலையாபருத்திக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில்** – முருங்கனிலிருந்து தலைமன்னரா் வரை, கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னரார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி பம் கவுஸ், மீன்பிடிச மாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் இராணுவமுகாம், தள்ளாடி டயலொக் கோபுரம், தள்ளாடி இராணுவ முகாம், பேசாலை Palmyra house - மன்னரார் அரசாங்க அதிபர் அலுவலகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## வாக்காளர் பெயர்பதிவு ஆவணத்தை சமர்ப்பிக்க நாளை இறுதி நாள்

### மேலதிக தேர்தல் ஆணையாளர்

வாக்காளர் பெயர்ப்பதிவு ஆவண படிவத்தை பூர்த்தி செய்து நாளை 8ஆம் திகதிக்கு முன்னர் கிராம உத்தியோகத்தரிடம் கையளிக்குமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல் ஆணையாளர் எம்.ஏ. பீ.சி.பெரேரா இதுதொடர்பாக தெரிவிக்கையில் –

குறிப்பிட்ட கால எல்லைப்பகுதிக்குள் வாக்காளர் டாப்பில் பெயரை பதிவு செய்ய முடியாமல் போன நபர்கள் அது தொடர்பாக கிராம உத்தியோகத்தர்கள் அல்லது மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு அதனை அறிவித்து குறித்த ஆவணத்திற்குள் தமது பெயரைப் பதிவுசெய்ய முடியும் என்று குறிப்பிட்டார்.

## ஏறாவூர் மோட்டார் சைக்கிள் விபத்து; பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழப்பு!

ஏறாவூர் கொரகல்லிமடு வித்தியாலயத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தி பொலிஸ் காண்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தர் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டுவிலகி அருகில் இருந்த மரத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 30 வயதுடைய ஓபநாயக மிதல்தெனிய பிரதேசத்தை சேர்ந்த பொலிஸ் காண்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

# மத்தள விமானநிலையத்தை இந்தியா இயக்கும்!

மத்தள விமானநிலையத்தை இந்தியா இயக்கும் என சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா சபையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை - இந்திய கூட்டு முயற்சியாக மத்தல விமானநிலையம் இயக்கப்படும், இந்த கூட்டு முயற்சியில் இந்தியாவிடமே அதிகளவு பங்குகள் காணப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

இரண்டு கோடிக்கு மேல் இழப்பைஏற்படுத்தியுள்ள அழிந்து கொண்டிருக்கின்ற விமானநிலையத்திற்கு புத்துயிர்வழங்க வேண்டும்.

எனினும், இது தொடர்பிலான இறுதிமுடிவுகள் இன்னமும் எட்டப்படவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியாவையும் சீனாவையும் திருப்திபடுத்துவதற்காகவா மத்தல விமான நிலையத்தையும் அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் வழங்குகின்றீர்கள் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கனகா ஹேரத் கேள்வி எழுப்பியுள்ளார்.

எனினும் அமைச்சர் நிமால் சில்வா இதனை நிராகரித்துள்ளார்.

# தினசரி ராசி பலன் (07.07.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆனித்திங்கள் 23 ஆம் நாள் சனிக்கிழமை நவமித்திதி இரவு 12.50 மணி வரை பின்னர் தசமி. நட்சத்திரம்:ரேவதி காலை7.39 வரை. பின்னர் அசுவினி. மரணயோகம் காலை 7.39 மணி வரை பின்னர் சுபயோகம்.

**ராகுகாலம்** - காலை 9.06 மணி முதல் 10.40 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 3.00 மணி முதல் 4.30 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆனி மாத தேய்பிறை நவமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - அசுவினி.

**ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** சலனம் மிகுந்த நாள். தொழில் நஷ்டம், வேலையில் இடையூறு அதனால் அதை விட்டுவிட வேண்டிய நிலை உண்டாகும். வருமானம் குறையும். பிறரால் வேதனைப் பட நேரும்.

**ரிஷபம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். செய் தொழில் வியாபாரத்தில், உத்தியோகத்தில் சிறப்பைக் காண்பார்கள். மனதில் தைரியம் ஏற்படும். புத்திரர்களால் பெருமை அடைவார்கள்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். மனதளவில் குழப்பமும். வீண் அலைச்சலினால் பணவிரயமும் உண்டாகும்.

**கடகம்** யோகமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில் சிறப்புப் பெறும். சிலர் வீட்டில் சுபகாரியப் பேச்சைத் தொடங்குவார்கள்.

**சிம்மம்** சஞ்சலமான நாள். பொருளாதார நெருக்கடியால் அவதியுற நேரும். தேவையில்லாத விஷயத்தில் தலையிடுவதால் நிம்மதியின்மையும், மனதளவில் குழப்பமும் காணப்படும். பிள்ளைகளால் குழப்பம் உண்டாகும்.

**கன்னி** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். தொழிலில் கண்ணும், கருதுமாக இருக்க வேண்டும். குடும்பத்தில் இவர்களுக்கு முக்கியத்துவம் குறையும். புதிய முயற்சியில் ஈடுபடலாகாது.

**துலாம்** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை நீடிக்கும். சமூக அந்தஸ்து உயரும். இதுவரை பகையாய் இருந்தவர்கள் நட்புடன் பழகுவார்கள். செய்தொழில் உயர்வு உண்டாகும்.

**விருச்சிகம்** ஆக்கபூர்வமான நாள். தொழிலில் தடை நீங்கி, விருத்தியும், லாபமும் பெரும். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். சமூகத்தில் மதிப்பு, கௌரவம் இருக்கும்.

**தனுசு** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் சம்பந்தமான அலைச்சல்கள் அதிகரிக்கும். உடல் நலக் குறைவால் வைத்திய உதவியை நாட வேண்டி வரும். சிலர் கொடுத்த கடனை மீளப் பெறுவதற்கு அலைவார்கள்

**மகரம்** விருத்தியான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றமான போக்கு தென்படும். சகோதர உறவு பலப்படும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெரும்.

**கும்பம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். உடலாரோக்கியம் சீராக இருக்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். ஸ்தல யாத்திரை புரிதல், பெரியோர்களைத் தரிசனம் செய்தல் நன்மையைத் தரும்.

**மீனம்** மகிழ்ச்சியான நாள். பணவரவு திருப்தி அளிக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும். ஆடை, அணிமணிகள் சேரும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும்

சந்திராஷ்டம நாள்; மகம், பூரம், உத்தரம், அத்தம், சித்திரை 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# தேர்தலில் அரசின் பலவீனத்தை மூடி மறைக்க தேர்தல் முறைமை மீது பழி சுமத்துகின்றனர்!

## சபையில் அனுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு



தேர்தலில் அரசாங்கதின் பலவீனத்தை மூடி மறைக்க தேர்தல் முறைமை மீது பழி சுமத்துவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். புதிய தேர்தல் முறைமை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதன் மூலமாக செலவுகள், அடாவடித்தனம் குறைந்த தன்மை காணப்படுகின்றது.

அரசு தனது அதிகாரத்தை தக்கவைக்க மீண்டும் தேர்தல் முறைமையை தமக்கு சாதகமாக பயன்படுத்துவது மோசமானதாகும் என மக்கள் விடுதலைமுன்னணியின்தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மீண்டும் பழைய முறைமைக்கு செல்லாது புதிய முறைமையில் திருத்தங்களை கையாண்டு தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று மாகாணசபைத் தேர்தல் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் -

தேர்தல் உரிய நேரத்தில் இடம்பெற வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். மக்களின் தேர்தல் உரிமை பறிபோகக் கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். தேர்தல் முறைமை குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இதற்கு முன்னர் 2012ஆம் ஆண்டு ஒரு தேர்தல் முறைமை முன்வைக்கப்பட்டது. எனினும் அது பொருத்தம் இல்லாத ஒன்று என்பதும், மாற்றம் ஒன்று வேண்டும் என்பதை நாம் அப்போதே தெரிவித்தோம்.

எனினும் நாடாளுமன்றத்தில் எம்மை விமர்சித்த பலர் ஜே.வி.பிக்கு பாதிப்பு என்பதால் தான் தேர்தல் முறைமையை எதிர்ப்பதாக கூறினார்கள். எனினும் நாம் கூறியது இன்று சரியாக உள்ளது.

இந்த தேர்தல் முறைமையின் செலவுகள், அதனால் ஏற்படும் அநீதிகள் என்பன மிகவும் மோசமானவை. இன்று மிகவும் இலகுவான வியாபாரமாக தேர்தல்கள் பெற்றுள்ளது.

அமைச்சர், மந்திரிகளாக முன்னர் அவர்களது சொத்து விவரங்களையும் அவர்கள் பதவிகளை பெற்ற பின்னர் அவரது சொத்துக்களை பாருங்கள் தேர்தல் எவ்வளவு இலாபமான வியாபாரம் என்பது தெரியும்.

அவர்களின் தேர்தல் வியாபாரத்தை தேர்தல் மூலமாக மூடிமறைக்க முடியாது. தேர்தல் என்பது மக்களின் நிலைப்பாட்டை அறிந்துகொண்டு நாட்டுக்கான தீர்மானங்களை எடுக்கும் பிரதான நோக்கமாகும்.

பிரதேசசபைகளின் அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும், அதனை நாமும் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

இது குறித்து உரிய அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

தேர்தல் என்பது மக்களை பாதுகாக்கும் ஜனநாயகத்தை உருவாக்கி அதன் மூலமாக நாட்டினை பலப்படுத்தும் நோக்கத்துக்காக தேர்தல் நடத்தப்பட வேண்டும். மாறாக இன ரீதியிலான தன்மைகளுக்கு அமைய தமது அரசியலை முன்னெடுத்து வருகின்றனர். இதனை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

இந்த நாடு சகல மக்களையும் இணைத்தநாடாகும். இதில் சகலரும் சகலரையும் ஆதரிக்க வேண்டும். இன்று இன முரண்பாடுகள் ஏற்பட பிரதான காரணமே இன ரீதியிலான அரசியல் முன்னெடுக்கப்படுகின்றமையின் காரணமாகும். இதற்கு இனம், மொழி, மதம், பிரதேசவாதங்களை பயன்படுத்திக்கொண்டு தமது அரசியலை தக்கவைத்து வருகின்றனர். இதுவே பிரச்சினைக்கு காரணமாகும்.

நாம் பிரிவதா, இணைவதா என்பது சிந்தித்து நாட்டுக்கு எந்தத் தேர்தல் முறைமை அவசியமா இல்லையா என்பதை சிந்திக்க வேண்டும். ஆனால் தமது வியாபாரங்களை கருத்தில் கொண்டும் மக்களை வைத்து வியாபாரம் செய்யவும் பலர் சிந்தித்து வருகின்றனர். இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

இந்தத் தேர்தல் முறைமை குறித்து நீண்ட காலமாக கலந்துரையாடியுள்ளோம். மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. முக்கியமாக இந்த ஆட்சி உருவாக்கப்பட்ட நேரத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்படுவது போலவே தேர்தல் முறைமையை மாற்றுவதாக கூறினர் .

எனினும் தேர்தல் முறைமை மாற்றத்தின் மூலமாக அரசுக்கு பாதகமான தீர்வுகள் அமையப்பெற்றதை அடுத்து மீண்டும் தேர்தல் முறைமையை மாற்ற வேண்டும் என கூறுகின்றீர்கள்.

கடந்த தேர்தலில் ,தேர்தல் முடிவுகள் வேறு பக்கம் மாறியிருந்தால், அரசின் பக்கம் சாதகமாக இருந்திருந்தால் மாற்றத்தைசெய்திருப்பீர்களா? தேர்தலில் அரசு தோற்றத்தின் காரணமாக தமக்கு வாய்ப்பினை தேடிக்கொள்ள தேர்தல் முறைமையினை மாற்றுகின்றனர். உங்களின் அதிகாரத்தை தக்கவைக்க நீங்கள் தேர்தல் முறைமையை மாற்ற வேண்டாம். மக்களின் நலனை கருத்தில் கொண்டு செயற்படுங்கள்.

பலமான அரசை மக்கள் உருவாக்கிய போதும் நீங்கள் அரசை அழித்துவிட்டு, இறுதியில் தேர்தல் முறைமை மீது பழிபோட்டுள்ளீர்கள். இந்த தேர்தல் முறைமை சிக்கலானது அல்ல. விருப்பு வாக்கு இல்லாது போவது எமக்கு சிக்கல் இல்லை. கட்சியாக நாம் இதன் விளைவுகளை அவதானித்துள்ளோம்.

இலங்கை வரலாற்றில் குறைந்த மோதல்கள், இழப்புகளுடன் இடம்பெற்ற தேர்தல் இந்த தேர்தலாகும். தெரிவானவர்கள் மோசடிக்காரர் என்றாலும் கூட முரண்பாடுகள் இல்லாத தன்மை இருந்தது.

செலவுகளை பார்த்தலும் மிகவும் குறைவாக காணப்பட்டது. புதிய அரசியல் முறைமை ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. அதனை மீண்டும் குழப்புவதற்கு நாம் தயார் இல்லை. இன ரீதியான சில முரண்பாடுகள் ஏற்படும் என்றால், போனஸ் ஆசனங்கள் குறித்தும், கலந்துரையாட முடியும்.

பல ஆலோசனைகள் உள்ளன. அவற்றை நாம் ஆராய முடியும். ஆனால் மீண்டும் பழைய சிக்கல்களை கையாள வேண்டாம். குறுகிய திருத்தங்களுடன் தேர்தலை சந்திப்போம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# விஜயகலாவை உடன் கைதுசெய்யுமாறு சிங்கள ராவய ஜனாதிபதிக்குக் கடிதம்

புலிகள் தொடர்பான சர்ச்சைக்குரிய கருத்தால் தற்போது இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து பதவி விலகியுள்ள விஜயகலா மகேஸ்வரனை கைதுசெய்யுமாறு சிங்கள ராவய அமைப்பு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை கையளித்துள்ளது என சிங்கள ராவய அமைப்பின் செயலாளர் மகல்கந்தே சுகந்த தேரர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

விடுதலை புலிகள் தொடர்பில் அண்மையில் சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டு இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து பதவி விலகியுள்ள விஜயகலா மகேஸ்வரனை உடனடியாக கைதுசெய்ய வேண்டுமென இன்று (நேற்று) முற்பகல் 10 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் கடிதமொன்றை கையளித்தோம்.

இந்தக் கடிதத்தில் ஜனாதிபதியின் தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி, இவ்வாறு பயங்கரவாதத்தை தோற்றுவிக்கும் வகையில் கருத்து வெளியிட்டு அரசமைப்புக்கு எதிராக செயற்பட்டமைக்காக நாடாளுமன்ற உறுப்பினரான விஜயகலா மகேஸ்வரனை கைதுசெய்ய பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளோம்.

எனவே, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுத்த இவரை காலம் தாழ்த்தாது உடனடியாக கைதுசெய்ய வேண்டிய நடவடிக்கைகளை நாட்டில் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மேற்கொள்ளல் வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# யுத்தம், சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களை மேம்படுத்தும் செயற் திட்ட அங்குரார்ப்பணம்

கொழும்பு, ஜுலை 07

கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் அந்தச் சமூகத்தில் வறுமை நிலையில் வாழ்பவர்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கான பங்களிப்பை மேற்கொள்ளும் செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இடம் பெற்றது.

மட்டக்களப்பு ஈஸ்ற் லகூன் சுற்றுலா விடுதியில் நேற்றுமுன் தினம் காலை இந்த நிகழ்வு ஆரம்பமானது.

சுவீடன் நாட்டின் வீ.எப்பக்ற் நிறுவனத்தின் ஊடாக இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களைக் கூட்டுறவின் ஊடாக மேம்படுத்தும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் இந்தச் செயற்றிட்டம் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காவியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் மற்றும் அனுராதபுர மாவட்டம் ரஜரட்ட பிரஜா நிலையம் ஆகியன இணைந்து இதனை முன்னெடுக்கவுள்ளன.

காவியா நிறுவனத்தின்



தலைமை நிறைவேற்று அதிகாரி திருமதி யோகமலர் அஜித்குமாரின் வரவேற்புரையுடன் ஆரம்பமான அங்குரார்ப்பண நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார், உதவி மாவட்டச் செயலாளர் ஏ.நவேஸ்வரன், மாவட்ட பிரதம கணக்காளர் எஸ்.நேசராஜா, வீ.எப்பகற் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் சுபாசிதிசாநாயக்க, திட்ட இணைப்பாளர் பிரியந்த ஜயக்கொடி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

2018 தொடக்கம் 2021 வரையான 4 ஆண்டு காலப் பகுதியில் கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ள இத் திட்டத்தின் ஊடாக 26 கிராமங்களிலுள்ள 2953 பயனாளிகள் பயன்பெறவுள்ளனர்.

அத்துடன், 12 மீனவ மற்றும் விவசாய கூட்டுறவுச் சங்கங்களும் இதில் ஈடுபடுத்தப்படுவர். பால்நிலை சமத்துவத்தை உறுதிப்படுத்தும் முகமாக அங்கத்தவர்கள் தொழில் உரிமையாளர்களாகவும் தலைவர்களாகவும் மாறுவதற்கு ஏதுவாக சந்தைத் தொடர்புகள், நிதி பெறுதல், விவசாயத் திறமைகளை வளர்த்தல் போன்ற விடயங்களில் இச்செயற்றிட்டத்தின் ஊடாக பயிற்சிகள் வழங்கப்படும்.

கூட்டுறவு அங்கத்தவர்கள் ஏனையோருக்கு முன்னுதாரணமாக திகழ்பவர்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக கூட்டுறவு அணுகுமுறையின் அடிப்படையில் யுத்தத்தால், பாதிக்கப்பட்ட ஆண்கள் , பெண்கள் மற்றும் இளைஞர்களின் மனிதாபிமான தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

வீ. எப்பகற் நிறுவனமானது சுவீடன் நாட்டின் கூட்டுறவு இயக்கங்களினால் 1958ஆம் ஆண்டு நிதியிடப்பட்ட நிறுவனமாகும். இலங்கையில் 1978ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது உள்ளூரில் 200 நிறுவனங்களுடன் 25 நாடுகளில் 5 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களுக்கு உதவி புரிந்து வருகிறது. இதற்கு நிதியளிப்பவர்களாக சுவீடன் அரசாங்கம், முதன்மையான கூட்டுறவு நிறுவனங்கள் தனிப்பட்ட கொடையாளிகள். மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியனவாகும்.

காவியா நிறுவனம் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 15 வருடங்களாக வறுமை மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களோடு தனது வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அத்துடன் விதவைகள் மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் விருத்தியை முதன்மையாகக் கொண்டு யுத்தம் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மகளிர் குழுக்களுடன் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிகழ்வில் வங்கி உத்தியோகத்தர்கள், கூட்டுறவு அமைப்பின் பிரதிநிதிகள், மண்முனை வடக்கு, மண்முனை மேற்கு, கோரளைப் பற்று தெற்கு, ஏறாவூர் பற்று, உள்ளிட்ட பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள், கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் பிரதேச சபைகளின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (க)

## யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் நாடக விழாவுக்கு ஜனாதிபதி நிதி அன்பளிப்பு



யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் நுண்கலைத் துறையும், 'வெறுவெளி அரங்கக் குழுவும்' இணைந்து ஏற்பாடு செய்யும் நாடக விழாவுக்கான செலவை பெற்றுத்தருமாறு நுண்கலைத் துறை மாணவர்கள் ஜனாதிபதியிடம் கோரியதன் பேரில் அந்த நிதியை ஜனாதிபதி மைத்திரிபால அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதற்கான காசோலையை கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

நுண்கலைத்துறையின் வெறுவெளி அரங்கக் குழுவின் தலைவரும் நுண்கலைத் துறையின் மாணவனுமாகிய ச. சுஜீவனிடம் இதற்கான காசோலையை ஜனாதிபதி வழங்கினார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையின் விரிவுரையாளர் கலாநிதி க.ரதிதரனம்; ஜனாதிபதியின் கலைச் செயற்பாடுகள் தொடர்பானபணிப்பாளர் நாயகம் தர்மசிறி பண்டாரநாயக்கவும் இதன்போது உடனிருந்தனர்.

## இரத்தினக்கல், ஆபரணத்துறை பிரச்சினை ஜனாதிபதி மைத்திரியின் கவனத்திற்கு!

கொழும்பு, ஜுலை 07

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இடம் பெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் இந்தத் தொழிற்துறையில் உள்ளவர்களும் வர்த்தகர்களும் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

தங்கத்திற்கு விதிக்கப்பட்டுள்ள நூற்றுக்கு 15 வீத இறக்குமதி வரி மற்றும் ஆபரண தொழிற்றுறையில் அதன் மோசமான பிரதிபலிப்புகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், தேசிய இரத்தினக் கற்கள் ஆபரண அதிகார சபையின் சில முன்மொழிவுகளும் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

இரத்தினக்கல் அகழ்விற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது அரச நிறுவனங்களிடமிருந்து பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதில் உள்ள பிரச்சினைகள் மற்றும் தாமதம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இரத்தினக்கல் அகழ்விற்கு காணிகளை விடுவிக்கும்போது அரச நிறுவனங்கள் மற்றும் பெருந்தோட்ட கம்பனிகள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இந்த பிரச்சினைகளில் தற்போது தீர்வுகளை வழங்கக் கூடிய பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வுகளை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களின் பங்குபற்றுதலுடன் ஜுலை மாதம் 12ஆம் திகதி மீண்டும் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு ஆலோசனை வழங்கினார்.

இந்த கலந்துரையாடலில் அமைச்சர் தயாகமகே, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.விஜேதுங்க, மகாவலி அபிவிருத்தி சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளர் அநுர திசாநாயக்க, இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையின் தலைவர் பேசல பண்டார ஜயரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

## 25 ஆயிரம் குடும்பங்களுக்கு கேகாலையில் குடிதண்ணீர் திட்டம்!

கேகாலை மாவட்டம் மாவனல்லை, அரநாயக்க மற்றும் ரம்புக்கனை ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் சுமார் 25 ஆயிரம் குடும்பங்களுக்கு சீராக குடிதண்ணீர் வழங்குவதற்காக ஹெம்மாதகம நீர் வழங்கல் திட்டத்துக்கு நெதர்லாந்து அரசுடன் ஒப்பந்தம் நிதி அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

65 மில்லியன் யூரோ செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இத் திட்டத்தின் மூலம் கேகாலை மாவட்டத்தை சேர்ந்த 62 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 25 ஆயிரம் குடும்பங்கள் நன்மையடையவுள்ளன.

இந்த நிகழ்வில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர, நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பெருந்தெருக்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கபீர் ஹாசிம், பிரஸ்தாப அமைச்சின் செயலாளர் ஹப்புஆரச்சி, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர் கே.ஏ. அன்ஸார், பிரதித் தலைவர் எம்.எச்.எம். சல்மான், இலங்கைக்கான நெதர்லாந்தின் உயர்ஸ்தானிகர் ஜோன்டோர்னீவார்ட் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## பேர்ப்பெச்சுவல் ட்ரெசரிஸ் நிறுவனத்தின் செயற்பாடுகள் மீதான முடக்கம் நீடிப்பு

பேர்ப்பெச்சுவல் ட்ரெசரிஸ் நிறுவனத்தின் வர்த்தக செயற்பாடுகள் மீதான முடக்கம் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் முதன்மை விநியோகத்தர் ஊடாக முன்னெடுக்கப்படும் வணிக செயற்பாடுகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் ஆறு மாத காலத்துக்கு இடைநிறுத்தப்பட்டது என மத்திய வங்கியின் நிதியச் சபை அறிவித்துள்ளது.

இரு கட்டளைச் சட்டங்களின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளின் பிரகாரம் மத்திய வங்கி நடத்தும் விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் பேர்ப்பெச்சுவல் ட்ரெசரிஸ் நிறுவனத்தின் வர்த்தக செயற்பாடுகள் மீதான முடக்கம் நீடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.


## தேசிய தொல்பொருளியல் தினம்!

தேசிய தொல்பொருளியல் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு மத்திய கலாசார நிதியமும், தொல்பொருள் அலுவலகமும் இணைந்து விசேட கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த கண்காட்சி சீகிரிய அரும்பொருள் காட்சியகத்தில் இன்றும், நாளையும் இடம்பெறும்.

இதில், சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மிகவும் முக்கியமான தொல்பொருள்களும் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.



# காரைநகர் களபூமி திக்கரை
# திருமஞ்ச வெள்ளோட்ட

## ஆசிச் செய்திகள்



திக்கரை முருகப் பெருமான் மீது அளவு கடந்த பக்தியும், பேரன்புடன், கேளிக்கைவிநோதங்கள் இன்றி அபிஷேகம், அலங்காரம் என்பவற்றை, பக்தி சிரத்தையுடன் மேற்கொள்வதுடன் பேர், புகழுக்காக அல்லாமல், கர்ணனை ஒத்ததாக "வலக்கை கொடுப்பது, இடக்கைக்குத் தெரியாதது" போன்று திருப்பணிகளையும் திருவிழா உற்சவத்தை சுட்டியர் பரம்பரையினர் நிறைவேற்றுகின்றனர்.

முருகப்பெருமானின் அளம்பெரும் கருணையினால் "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்ற மணிவாசகப் பெருமானின் திருவாசகத்திற்கு அமைய இன்றைய நன்னாளில் எமது ஊரைச் சேர்ந்த சிற்பக் கலைஞர் விஸ்வப்பிரம்மஸ்ரீ நடராசா சிவபாலன் குழுவினரின் கைவண்ணத்தில் அழகிய திருமஞ்சம் அமைக்கப்பட்டு, வெள்ளோட்ட விழா நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சி தருகின்றது. அந்த வகையில், இன்றைய பகல் திருமஞ்ச வெள்ளோட்ட விழா சிறப்பாக நடைபெறுவதற்கும், இரவு நடைபெறவுள்ள அழகிய திருமஞ்சத்தில் முருகப் பெருமான், விநாயகர், சிவசுவாமி சகிதம் வள்ளி, தேவசேனா சமேதராய் எழுந்தருளி, திரு வீதியுலா வந்து அடியார்களின் பாவப் பிணிகளைப் போக்கித் திருவருள் பாலிக்க வேண்டும் என்றும் எல்லாம் வல்ல திக்கரை திரு முருகப் பெருமானை வணங்கி ஆசிகள் கூறுவதுடன் -

இத் திருப்பணியை நிறைவு செய்ய நிதியுதவி புரிந்த சுட்டியர் பரம்பரையைச் சேர்ந்த திருப்பணிக் குழுவினருக்கு என்ன சிந்தனைகளை அவர்கள் மனதில் கொண்டு பூர்த்தி செய்தார்களோ அவர்களின் எண்ணங்கள் ஈடேற வேண்டும் 'நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்' அவர்கள் சகல செல்வங்களும் பெற்று சௌபாக்கியமாக வாழ்வதற்கும், இதை அழகாக அமைத்த சிற்ப கலா விநோதன் நடராசா சிவபாலன் ஆசாரியர் குழுவினரின் சிற்பக்கலை மேன்மேலும் வளர வேண்டும் என்றும் ஆசிகள் கூறி அமைகின்றோம்.

**"லோகாசமஸ்த்த சுகினோபவந்து"**
**பிரம்மஸ்ரீ கு.சரவணபவானந்த சர்மா**
**ஆலய பிரதமகுரு**

அருள்மிகு மாவை வடிவேலன் துணை கொண்டு காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி பெருமமானுக்கு செய்யப்பட்ட திருமஞ்ச வெள்ளோட்ட விழா 07.07.2018 அன்று இடம் பெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இன்னும் கலியுகவரத னாம் கந்தப் பெருமானது திருவருள் தங்களுக்கும் ஏனைய அடியார்கள் யாவர்க்கும் மிகையாகக் கிடைக்க எம் பெருமான் மாவை காங்கேய மூர்த்தியைப் பிரார்த்தித்து விழாக்கோலம் சிறக்கவும் அவன் அருட்கோலம் கண்டு யாவரும் மனம் குளிர வேண்டி எம் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

மகாராஜஸ்ரீ **து.ச.இரத்தினசபாபதிக்குருக்கள்**



காரைநகர் மக்களின் குல தெய்வமாக விளங்கும் திக்கரை முருகப் பெருமானின் சந்நிதி, மூர்த்தி, தலம், தீர்த்தமும், அழகும், சிற்பவேலைகளும், இறைஅருள் ஒளியும் தன்னகத்தே கொண்டது.

முருகப் பெருமானின் மஹோற்சவ நன்னாளில், புதிதாக சிற்ப வேலைப்பாடுகளோடு மிகவும் கண்ணைக் கவரும் வகையில் (இந்திர ரதம்) எனும் பஞ்ச வாகனத்தை வடிவமைத்த உபயகாரர்கள், ஆலய மேலாண்மைகள், அடியவர்கள் அனைவருக்கும் முருகப் பெருமானின் நல்லாசிகள் கிடைக்கப் பெற்று, சகலரும் சகல சௌபாக்கியங்களுடன் வாழ எனது நல்லாசிகளைக் கூறுகின்றேன்.

**பிரதிஷ்டா ரத்தினம்**
**சிவஸ்ரீ ச.ஸ்ரீமதுசூதனக்குருக்கள்**



ஈழமணித் திருநாட்டின் சிகரம் என விளங்கும் யாழ். மாவட்டத்தின் காரைநகரில் எழுந்தருளி அருள்பாலிக்கும் திக்கரை முருகமூர்த்தி கோவிலில் திருமஞ்ச வெள்ளோட்ட சிறப்பு நிகழ்வுக்கு எமது ஆசியுரைகளை வழங்குகிறேன்.

'மஞ்ச' என்பது சமஸ்கிருத மொழியில் 'ஆசனம்' எனப் பொருள்படும். மகோற்சவம் மற்றும் உற்சவம் நிகழும் வேளைகளில் இறைவனை வீதியுலா வருவதற்கு எழுந்தருளச் செய்யும் ஆசனமே 'மஞ்சம்' என்றாகின்றது. தேரினை நிகர்த்தாகவும் இராஜ கோபுரத்தைப் பிரதிபலிக்கும் தன்மையிலும் மஞ்சம் எனும் கலைவனப்புடைய வாகனம் தனித்துவம் பெறுகின்றது. 'சிற்பரத்தினம்' எனும் சிறப்பு நூல் மரங்களில் இறைவனுக்குரிய வாகனங்களை எவ்வாறு அமைப்பது பற்றிய விவரங்களைக் கூறுகின்றது. நான்கு சில்லுகளுடன் கோபுரத்துக்குரிய ஆசன அமைவுடன் மேற்பகுதி சாலாகாரம் அல்லது சத்திராகார அமைப்பில் கோபுரத்தை நிகர்த் தன்மையில் கலைவனப்புடன் அமைந்துவிளங்குவது சிற்பிகள் வகுத்துக்காட்டும் முறையாகத் தொன்று தொட்டு பின்பற்றப்பட்டுவருகின்றது. இந்த ஆலயத்திற்குத் திருமஞ்ச உலா நடத்துவது பெரும் பேறாகும். இந்த மஞ்சம் அமைக்க உதவி புரிந்தவர்கள், பங்காற்றியவர்கள் யாவர்க்கும் காரைநகர் திக்கரை முருகமூர்த்திப் பெருமானின் கிருபா கடாட்ஷம் பெற்று உய்ய எமது நல்லாசிகள்.

**நல்லூர் சிவஸ்ரீ முத்துக்குமார வைகுந்த வாசக்குருக்கள்**



அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து. காரைநகர் களபூமி திக்கரை ஸ்ரீ முருக மூர்த்தி கோவில் திருமஞ்ச வெள்ளோட்ட சிறப்பிதழுக்கு ஆசிச்செய்தி வழங்கும் பேறு கிடைத்தமைக்கு மிகவும் சந்தோஷம் அடைகின்றேன்.

இவ்வகையில் இறைவனைத் தாங்கும் வாகனங்கள் வரிசையில் 'திருமஞ்சமே' முக்கியமான சிறப்பான இடத்தை வகிக்கின்றது. சிவபூமியாம் இலங்கைத் திரு நாட்டில் உள்ள ஆலயங்கள் சிலவற்றின் மஞ்சம் எனும் திரு உற்சவம் சிறப்பிடம் பெருகின்றது. மஞ்சம் என்னும் சொல் பொது வழக்கில் அழைக்கப்பட்டாலும் சிற்ப நூல்களில் உள்ள குறிப்புகளில் 'தேவ விமானம்' என அடையாளப்படுத்தப்படுகின்றது. இந்திர விமானம் எனவும் இது போற்றப்படுகின்றது. மஞ்சமானது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மூலாலயத்தை ஒத்த வடிவமைப்பைக் கொண்ட தன்மையைக் கொண்டிருக்கும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் திக்கரை பதியிலே வீற்றிருந்து திருவருள் பாலித்து வரும் முருகப் பெருமானுக்கு புதிதாக 'மஞ்சம்' அமைக்கப்பட்டு இன்று வெள்ளோட்டம் காண்கின்றது. அனைவரும் இன்ப மகிழ்வுடன் இருக்கும் இச்சமயத்தில் நாமும் இணைந்து வம்சவிருத்திகரனான முருகனின் திருவருள் பெருவருளாக அனைவருக்கும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தனை செய்கிறேன். அதுபோல் இம்முயற்சிக்கு பொருளுதவி, சரீர உதவியுற்றோருக்கும் திருப் பணிக் குழுவினருக்கும் குறிப்பாக அதற்குரிய சுகந்தன் ஆசிரியருக்கும் எனது அன்பையும் பாராட்டையும் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

சிவஸ்ரீ கு.வை.க.வைத்தீஸ்வரக் குருக்கள்



திக்கரை முருகமூர்த்தி கோயில் திருமஞ்ச வெள்ளோட்டத் திருநாளில் ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன். சைவத்தின் பாற்பற்றுடைய மாந் தர்கள் நிறைந்து வாழும் பதியாம் காரைநகர் அம்மையப்பன் நடுநாயகமாகவும் பிள்ளையார், முருகன் முதலான பரிவார தெய்வங்கள் தனித்தனி சந்நிதானங்களாக எழுந்தருளி சிவலோகமாகக் காட்சி தருகின்ற காரைநகரின் கண்ணே, பக்திக்கும், தான தர்மங்களுக்கும் களபூமி திவ்ய கிராமத்தின் திக்கரை முருகமூர்த்திப் பெருமானுக்கு அழகிய சிற்ப வேலைப்பாடு கொண்ட திருமஞ்சம் அமைக்கப் பெற்று இன்று வெள்ளோட்டம் நடைபெறுவது அனைவருக்கும் கிடைத்த புண்ணிய பேறாகும். இப் புண்ணியமான பணியில் ஈடுபட்ட ஆலயத்தினர், உபயகாரர்கள், தொண்டர்கள், அடியார்கள் மற்றும் வடிவமைத்த காரை ஊர் கலைஞனுக்கும் ஆலய குருமார்களுடன் சேர்ந்து ஆசிர்வதிக்கின்றேன். விழாச் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

சந்நிதாச்சாரியார்
**சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்**
**குருமுதல்வர், வீணாகான குருபீடம், சித்தன்கேணி**



இன்று முற்பகல் நடை பெறுகின்ற திருமஞ்ச வெள்ளோட்ட விழா சிறப்பாக நடைபெற, முருகப் பெருமானைப் பிரார்த்தனை செய்து நல்லாசிகள் கூறுவதுடன், இரவு நடைபெறுகின்றத் திருமஞ்ச திரு விழாவில் அடியார்கள் கலந்து கொண்டு திருமஞ்சவடம் பிடித்து, இழுத்து தங்கள் பாவவினைகளைப் போக்கி, முருகப் பெருமானின் திருவருளைப் பெற வேண்டும் என்று நல்லாசிகள் கூறி அமைகின்றோம்.

லோகா சமஸ்த்தா சுகினோபவந்து
**சிவஸ்ரீ சோ.கு.சண்முகராஜக் குருக்கள் பிரதமகுரு,**
பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமி ஆலயம்
திக்கரை, களபூமி, காரைநகர்



திக்கரையில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் முருகப் பெருமானுக்கு அழகான திருமஞ்சம் அமைக்கப்பட்டு இன்று வெள்ளோட்ட நிகழ்ச்சி காண்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. திக்குத் தெரியாமல் இருந்த மக்களை கரை காட்டி தன்வசப்படுத்திய முருகன், நிறைந்த அழகுடையவர். அழகனைச் சிறப்புச் செய்யும் வகையில் மஞ்சம் அமைத்து முருகனை அமர்த்தி அழகு பார்ப்பது சிறப்பிற்குரியது. நமக்கு எல்லாம் தந்த இறைவனுக்கு தேர், மஞ்சம், சப்பறம், கைலாசவாகனம் போன்ற ஊர்திகள் அமைத்து இறைவனை எழுந்தருளச் செய்வது சமயத்தின் வழிமுறையாகும். மாலைப் பொழுதுக்குரிய வாகனம் திருமஞ்சம் ஆகும். தேர் பகற் பொழுதிற்கும், சப்பறம் இரவுப் பொழுதிற்கும் பின்புகலைகளோடு இறைவனுக்கு சமர்ப்பனம் செய்து மஞ்சத்தை உருவாக்கிய சிற்பக் கலைஞர்களுக்கும் மலராசிரியருக்கும் ஆலய அறங்காவலர்க்கும் உபயகாரர்களுக்கும் இறையாசிகள் கிடைப்பதாக! "என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**நல்லூர் ஆதீன**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.**

## நிமிர்வுடனே மஞ்சமதும் அசைந்ததம்மா!

உலகமெலாம் உயர்ந்திடவே மஞ்சம் ஏறி
ஓங்கு புகழ் முருகனுமே உலவ வந்தான்
நலங்களெலாம் நாம் அடையக் கைவேல் ஏந்தி
நானிலமும் அறுமுகத்தால் பார்த்து வந்தான்
வளங்கள் மிகு காரைநகர் சிறந்து ஓங்க
வற்றாத திக்கரையின் கோயில் மேவி
நிலங்களெலாம் தலை நிரப்பி பக்தர் நின்றார்
நிமிர்வுடனே மஞ்சமதும் அசைந்ததம்மா!

வடபுலத்தின் பேரொளியாய்த் திகழும் நல்ல
வற்றாத பெருமை மிகு காரை மண்ணில்
திடமுடனே திக்கரையின் மக்களெல்லாம்
தேர்ந்தேதான் மஞ்சமதில் முருகன் ஏற
சடசடெனத் திருப்பணிகள் செய்து கூட்டி
சட்டென்று மஞ்சமதை செய்து நின்றார்
அட இவரின் ஆற்றலதை என்ன சொல்வேன்?
அற்புதமாம் அறப்பணியை வாழ்த்தி நின்றேன்.

**- கம்பவாரிதி இ.ஜெயராஜ் -**

## திரு மஞ்ச தி




## திருமஞ்ச திருப்பணி குழு
## ஆசிரியர் திரு.ச.சுகந்தன்



பூலோகத்தில் சொர்ண தீவு என்றுசொல்லப்படும் இலங்கைத் தீவின் வடபால் அமைந்துள்ள காரைநகர், சைவமும் தமிழும் இறைபக்தியும் தழைத் தோங்க, கொடை வள்ளல்களும் கல்விமான்களும், வர்த்தகப் பெருமக்களும் வாழ்ந்து வரும் புண்ணிய பூமி ஆகும். இங்கு சூரியன் உதிக்கின்ற திசையில் வேண்டுவோர் வேண்டும் வரம் தந்தருளும் பொருட்டு திக்கரைப்பதியிலே கலியுக வரதனாம் வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமானாக வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கிறான் அவ்வகையில், முருகப்பெருமானது வருடாந்த மகோற்சவ பெருவிழா. ஆனி அமாவாசையை தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்துத் தினங்கள் சிறப்பாக நடைபெற்று 11 ஆவது நாள் பூங்காவனம் உற்சவத்துடன் இனிதே நிறைவடைகின்றது. அவ்வாறு இந்த ஆலயத்தில் கைலாசவாகன திருவிழா, மாம் பழத் திருவிழா, வேட்டைத் திருவிழா, பெரிய சப்பறம், தேர்த் திருவிழா, தீர்த்தோற்சவம், பூங்காவனம் என்பன சிறப்பாக நடைபெறுகின்றமையுடன் திருமஞ்சம் இல்லாத குறை இருந் தது. இத் திருமஞ்சத் திருவிழாவை 5 ஆம் திரு விழாவாக முருகன் திருவருளால் சுட்டியர் பரம்பரையைச் சேர்ந்த அடியவர்களாகிய இளம் சந்ததியினர்களின் மனதிலே முருகனுக்கு அழகிய திருமஞ்சம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதைத் தீவிர மாகச் செயற்படுத்த முதலில் இத் திருப்பணியை அமைப்பதற்கான நிதியைப் பெற்றுக் கொள்ள S.V.M குணரத்தினம் அவர்களுடன் கலந்துரையாடி அவர் பூரண சம்மதத்தைத் தெரிவிக்க, பின்னர் ஐந்தாம் திருவிழா உபயகாரராகிய C.S.K சிவபாத சுந்தரம் அவர்களும் பூரண ஒத்துழைப்பையும் நிதி உதவியையும் வழங்குவதாகத் தெரிவித்தார். இத் திருப்பணியைச் செய்வதற்கு ஆலய அறங்காவலர் உமாசங்கர் அவர்களும் தனது பூரண சம்மதத்தைத் தெரிவித்தார். அதன்படி, இத் திருப்பணி 2017 ஆம் ஆண்டு ஆவணி

மாதம் சி.நேசே
காட்டலுடன் சி
பிரம்மஸ்ரீ நடர
களுடன் ஒப்ப
பித்தோம். மேலு
ஏனைய சுட்டியா
வர்களின் நிதியை
அழகிய சிற்ப
திருமஞ்சத்தை அ
காரைநகரில் எ
மஞ்சம் இல்லை என
ளால் நீங்கியது. சிற்ப
இத் திருமஞ்சத்தை
தந்த சிற்பாசிரியார் ந
பெரும் நிதியுதவியை
குடும்பத்தினருக்கும்
குடும்பத்தினருக்கும்
ஒத்துழைப்பு வழங்கி
ளுக்கும் என்னோடு
நிறைவுசெய்ய பக்கப
துடிப்பான இளைஞர்
ரூபன் ஆகியோருக்
மஞ்சத்தை அமை
ஒத்துழைப்பை வழ
காவலர் P.உமாசங்க
துடன் இத் திருப்பணி
கும் முருகப்பெரும
கிடைக்கப் பிரார்த்தன
வனாகிய நான் பள்ள
பெருமானுக்கு சரிவை
வாய்ப்பைப்பெற்றமை
பெரும் திருப்பணிகை
திருவருளால் தலை
இனிதே நிறைவடை
படைகிறேன். 'சிறுபிள்
வந்து சேராது' எனு
பித்துள்ளதோடு, அ
வாழ்த்துரையைச்
தகுயில்லை. ஆனா
ஈடுபட்ட அனைவருக்
யங்களும் கிடைக்க
கைகூடும் என்பது
அமை கின்றேன்.

## செஞ்சொற் செல்வரின் வாழ்த்து



அருள்வளம் நிறைந்த திருவூர் காரைநகர் திருக்கோவில் திருப்பணிக்கு தினம்தோறும் அள்ளிக் கொடுப்பவர்கள் இவ்வூர் பக்தர்கள். அதனால் காரைநகரில் உள்ள திருக்கோவில்கள் அனைத்தும் திருப்பணிகளால் செழிப்புற்று காட்சியளிக்கின்றன. காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி கோவிலுக்கு புதிதாக திருமஞ்சம் செய்யப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகின் றேன்.

இத் திருப் பணியில் பங்கு கொண்டு

உழைத்
முருகப்
டாட்சம்
வேண்டு
யான் தி
வந்து எ
தர பிரா
கும் என
வாழ்த்து
கின்றே
கலாநி

தேவஸ்தான

S.V.MURUGESU
NO. 154 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
TP- 021-4925831/ 021-2228899

C.S. கனகரத்தினம்
சிவா வர்த்தக நிலையம்
T.P. 0776748369
viber 0772498370
102 (296) ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

S.சிவ
எரிபொருள் நி
519/C ஜெயந்
அனுரா

# ரை அருள்மிகு முருகமூர்த்தி கோவில்
# ட சிறப்பு மலர் (07.07.2018)

## திருப்பணி குழு



## ...தழு சார்பில் ...தன்

...சி.நேசேந்திரம் அவர்களின் வழி ...லுடன் சிற்பாசாரியார் விஸ்வ ...மஸ்ரீ நடராசா சிவபாலன் அவர் ...ன் ஒப்பந்தத்தைச் செய்து ஆரம் ...தாம். மேலும் இதற்கான நிதியை ...ாய சுட்டியர் பரம்பரையைச் சேர்ந்த ...ரின் நிதியையும் பெற்றுக் கொண்டு ...ய சிற்ப வேலைப்பாடு கொண்ட ...தை அமைக்க எண்ணினோம். ...நகரில் எந்த ஆலயத்திலும் திரு ...லை என்ற குறை முருகன் அரு ...யது. சிற்ப வேலைப்பாடு கொண்ட ...ஞ்சத்தை சிறப்பாக அமைத்துத் ...சிரியார் நடராசா சிவபாலனுக்கும் ...புதவியை வழங்கிய S.V. முருகேசு ...னருக்கும் C.S.K. சிவபாதசுந்தரம் ...னருக்கும் எனக்கு பூரணமான ...பு வழங்கிய நேசேந்திரம் அவர்க ...ன்னோடு தினமும் இப்பணியை ...பயபக்கபலமாக நின்று செயற்பட்ட ...இளைஞர்களான தினேஷ், ஹரி, ...கியோருக்கும் மேலும் இத் திரு ... அமைப்பதற்கு பூரணமான ...பை வழங்கிய ஆலய அறங் ...உமாசங்கர் அவர்களுக்கும் அத் ...திருப்பணியில் ஈடுபட்ட சகலருக் ...ப்பெருமானுடைய திருவருள் ...ிரார்த்தனை செய்வதோடு, அடிய ...ான் பள்ளிப் பருவத்தில் முருகப் ...க்கு சரியைத் தொண்டு செய்யும் ...பெற்றமையோடு மாத்திரமின்றி, ...ப்பணி கைங்கரியத்தை முருகன் ...ல் தலைமையேற்று இத்திருப்பணி ...றைவடைந்ததையிட்டு மனம் பூரிப் ...ா. 'சிறுபிள்ளை வேளாண்மை வீடு ...து' எனும் முதுமொழி பொய்ப் ...தோடு, அடியவனாகிய சிறியவன் ...ரயைச் செய்வதற்கு எனக்குத் ...ம. ஆனால், இத் திருப்பணியில் ...னைவருக்கும் சகல சௌபாக்கி ... கிடைக்க முருகன் திருவருள் ... என்பது நிச்சயம் எனக் கூறி ...றேன்.

## திருமஞ்ச தரிசனம் கோடி புண்ணியம்



பிறவிப் பெருங்கடலிலே அழுந்தும் எம்முடைய வினைகளை அறுத்து, பேரின்பப் பெருவாழ்வுக்கு இழுத்துச் செல்ல நிலைகளனாக விளங்குபவை ஆலயங்கள். ஆலயம் எனக் குறிப்பிடும் போது கோபுரம், திருமதில், திருச்சுற்று முதலான வரையறைகளை உடையதாய் இட வரம்புக்கு உட்பட்டதென்பதை நாம் உணரலாம்.

இந்த ஆலயத்துக்கு இவை உரியவாறு காணப்பட்ட போதும் திருமஞ்சம் செய்வதும், அதைச் செல்விப்பதும், பார்த்து மகிழ்வதும் கோடி புண்ணியம் என ஆகமம் கூறுகிறது. இந்த வகையில், காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி கோவிலில் முருகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் திருமஞ்சம் கிடைக்கப் பெற்றது மிகவும் சிறப்பாகும். அதையொட்டி திருமஞ்ச வெள்ளோட்டம் காண இருப்பது இப்பகுதி மக்களுக்குக் கிடைத்த திருவருட்கடாட்சமாகும்.

சைவ ஆலயங்களின் திருப்பணி வரலாற்றில் புதிய ஓர் அத்தியாயமாக இடம் பெறக்கூடிய அளவுக்கு திருமஞ்சமும் அதற்குரிய இருப்பிடமும் ஒன்றிணைந்துள்ளது. பல லட்சம் ரூபாய் மதிப்பிலான அரும் பெரும் சைவப் பணியை மேற்கொண்ட இந்த ஆலய ஐந்தாம் திருவிழா உபயகாரர் திரு.C.S.K.சிவபாத சுந்தரம் அவர்களின் பூரண ஒத்துழைப்பும் திரு. S.V.முருகேசு குடும்பத்தினர் ஆகிய இருவரின் பெரும் நிதி உதவியுடனும் ஏனைய சுட்டியர் பரம்பரையைச் சேர்ந்த முருகன் அடியார்களின் நிதிப் பங்களிப்புடன், சிற்ப வேலைகளை மிகத் திறம்படச் செதுக்கிய சிற்பகலாவிநோதன் நடராசா சிவபாலன் ஆசாரி அவர்களையும் பாராட்டுவதுடன், ஆலயத்தை சிறப்பாக நடத்த இப்பகுதி மக்கள் அனைவரும் தொடர்ந்துபாடுபட வேண்டும் என இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந் நாளில் திருமஞ்சத்துடன் கம்பீரமாக நிமிர்ந்து நின்று அடியவர்களுக்கு அருள் பாலிக்கும் குமர கோட்டமாக களபூமி திக்கரை முருக மூர்த்தி ஆலயம். மிளிர நாம் அனை வரும் அந்தக் கலியுக வரதனின் பாதார விந்தங்களைப் பணிந்து வேண்டு வோமாக.

**P.உமாசங்கள்**
*ஆலய அறங்காவலர்*

## திக்கரை முருகன் அருள் கிட்டட்டும்



*மஞ்சம் என்றால் பொதுவாக படுக்கை என்ற கருத்து உண்டு. இருந்தும் மாமனாகிய மாயவனைப் போலன்றி மருகனாகிய முருகன் மஞ்சத் தேரினிலே பள்ளி கொள்ளாமல் இருக்கையிலமர்ந்து, பவனி வந்து அருள் புரியத் தொடங்குகின்றான். அவனருளாலே அவன் தாள் வணங்கி அடியார்கள் பேரின்பம் அடைய வாழ்த்தி வணங்குகின்றேன்.*

*மஞ்சத்தேர்திக்கரை முருகனைக்குலதெய்வமாகக் கொண்டு வாழ்ந்த அமரர் திரு.எஸ். வி. முருகேசு அவர்களினது மைந்தன் திரு. குணரத்தினம் அவர்களும் அமரர் C.S கனகரத்தினம் அவர்களது மைந்தன் க.சிவபாதம் அவர்களும் முன்னின்று பெருநிதி வழங்கிய தோடல்லாமல், தமது உறவினர்களையும் சந்ததியார்களையும் அணைத்து தாம் பெறவுள்ள பேரின்பம் அவர்களும் அடையவேண்டுமென்ற நோக்கத்துடன் இத்திருப்பணியை நிறைவேற்றியதையிட்டு பூரிப்படைகின்றேன். அவர்கள் திருப்பணி முயற்சிகள் தொடர்ந்து நடைபெற 'அரக்கர் அகந்தை யன்று தொலைத்த நல்ஞானவேல் புரக்கும் திக்கரை வாழும் புண்ணிய மூர்த்தியாம்' முருகன் அருள் புரிய அவனது பாதார விந்தங்களை வேண்டி வணங்குகின்றேன்.*

***சிவா தி.மகேசன்***

## ...ழ்த்துச் செய்தி

...உழைத்த அன்னவருக்கும் முருகப்பெருமானின் அருட்கடாட்சம் நிறைவாகக் கிடைக்க வேண்டுகின்றேன். திக்கரையான் திருமஞ்சத்தில் பவனி வந்து எம் மண்ணுக்கு விடிவு தர பிரார்த்தித்து அனைவருக்கும் எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பிக்கின்றேன்.

**கலாநிதி.ஆறு.திருமுகன்,**
**தலைவர்,**
ஸ்ரீ துர்க்காதேவி ...வஸ்தானம், தெல்லிப்பழை



காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்திப்பெருமான் கலியுகத்திற்கு கலியுக வரதனாக வள்ளி தேவசேனா சமேத சிவசுப்ரமணிய பெருமானாக திக்கரையம் பதியிலே கோவில் கொண்டு வீற்றிருந்து திருவருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார். வருடாவருடம் நடைபெறுகின்ற பிரம்மோற்சவ விஞ்ஞாபனத்தில் 5 ஆம் திருவிழாவை காசி அம்பலம் எமது தந்தையார் C.S.கனகரத் தினத்திடம் அறப்பணியை ஒப்படைத்தார். அவன் அருளினாலே அவன் தாள் வணங்கி, அவன் அருளினாலே இவ் அறப்பணியை செவ்வனே செயற்பட்டும் போற்றியும் குல தெய்வமாக வணங் கியும் வருகின்றேன். இறைவனை அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கின்ற மனிதர்களை பல்வேறு விதமான முயற்சிகளின் மூலமாக முயன்று கொண்டிருக்கின்றார்கள். "குரு இல்லாதவித்தை பாழ்" குரு இருந்தால் தான் திருவருளைப்பெற முடியும். "குருவாய் அருள் வாய்குகனே" முருகப் பெருமான் அருள் பேரருளாகி, தனக்கென அழகிய திருமஞ்சத்தை அமைப்பதற்கு ஆயகலைகள் அறுபத்து நான்கும் அதில் 13 ஆவது சிற்பசாஸ்திரம் (சிற்பக்கலை நூல்) விஸ்வப்பிரம்மஸ்ரீ நடராசா சிவபாலன் மூலம் குருவாக வந்து அவரது கைவண் ணத்தில் திருமஞ்சத்தை அமைத்தார் என்றால் மிகையாகாது. அழகிய திருமஞ்சத்தில் பிள்ளையார், வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணிய பெருமான் தண்டாயுத பாணியாக அடியவர்களுக்கு அருட் காட்சியளித்தும் வீதியுலா வந்தும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற் படுத்தி, மழைமாரி பொழிந்து ஒவ்வொரு வரின் வாழ்விலும் படர்கின்ற நல் வினை, தீவினை பாவங்களைக் களைந்து உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்தொளிந்தோம் உய்யாமல் எம்மை காத்து திருவருள் புரியமாறு எல்லாம் வல்ல திக்கரை முருகமூர்த்தி பெருமானின் பாதார விந்தங்களைப் பணிகின்றேன்.

**க.சிவபாசுசுந்தரம், 5 ஆம் திருவிழா உபயகாரர்.**

## வாழ்த்துச் செய்தி



காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி ஆலயத்தில் புதிதாக நிறுவப்பட்ட அழகிய சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட திரு மஞ்சத்தின் வெள்ளோட்ட நிகழ்வு இவ்வாலயத்தின் மகோற்சவ ஐந்தாம் திருவிழாவின் காலை உற்சவத்தில் இடம் பெறு கிறது. அன்றையதினம் மாலை முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சகிதம் விநாய கர் தண்டாயுதபாணி ஆகிய சுவாமிகளோடு வீதியுலா வரவிருக்கின்றார்கள்.

மஹோற்சவ காலத்தின் போது இறைவன் தினமும் திருமஞ்சம், சப்பறம், தேர் போன்ற ஒவ்வொரு வகையான வாகனங்களில் வீதியுலா வருவார். ஒவ்வொரு வாகனங்களும் விதம் விதமாக அலங்கரிக்கப்படுவன. இவ்வாறான வேறுவேறான அலங்காரங்கள் இறைவனின் ஒவ்வொரு செயலைக் குறிப்பனவாக அமையும். திருமஞ்ச பவனி அலங்காரம் இறைவனின் ஆனந்தக் களிப்பை வெளியிடுவதாக அமையும்.

திருமஞ்சவெள்ளோட்ட நிகழ்வுகளைக் கண்ணாரக் கண்டு களிப்பதற்கும் இறை வனை ஆடியும் பாடியும் போற்றிப் புகழ்ந்து வணங்குவதற்குமாக திரண்டிருக்கும் அடியார் கூட்டம் திருமஞ்ச வெள் ளோட்ட நிகழ்வு சிறப்புற அமையவும் முருகப் பெருமானின் இடையறா அருள் வெள்ளம் அடியார்களுக்குக் கிட்டவும் எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டி இச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
*முதலமைச்சர், வடமாகாணம்*

## ஆறினில் உதித்த திருமஞ்சம்



காரைநகர் திக்கரையில் வீற்றிருக்கும் ஆறுமுகப் பெருமானுக்கு சுட்டியர் பரம்பரையில் ஆறாவது இளம் சந்ததியினர் மனதில் உதித்துத் தான் ஆறுமுகனுக்கு ஒரு திருமஞ்சம். நினைக்கவே உடம்பு புல்லரிக்கின்றது. இப்படி ஓர் எண்ணம் இளம் சிறார்கள் மத்தியில் தோன்றியது என்னவோ முருகப் பெருமான் மேல் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை என்றே எனக்குத் தோன்றுகிறது. 'சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது' என்பார்கள். அதை பொய்ப்பிக்கும் வகையில் தங்களுக்கு ஆதரவாக இருக்குமாறுதான் எங்களைக் கேட்டுக் கொண்டார்கள். அதற்கேற்ப அவர்களைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தினோம். இன்று இந்தக் கைங்கரியம் நிறைவுற்று திருமஞ்சத் திருவிழா நடைபெறக்கைகூடியுள்ளது. திக்கரை முருகனின் அருளைவிட வேறொன்றுமே இல்லை. முருகனின் திருப்பணிகள் இன்னும் பல உண்டு. இளம் சந்ததியினர் இன்னும் பல திருப்பணிகளை நிறைவேற்ற வேண்டும் என வாழ்த்துகின்றேன். ஆண்டவன் பணத்தை தருவது தர்மத்தை செய் வதற்கே.

**S.நேசேந்திரம்**

## அரச அதிபரின் வாழ்த்து



காரைநகர் களபூமி, திக்கரை முருகமூர்த்தி திருக்கோயில் திருமஞ்ச வெள்ளோட்ட சிறப்பு மலருக்கு வாழ்த் துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடை கின்றேன்.

ஆலயங்கள் மற்றும் அற நிலையங்கள் ஆன்மீகத் தேடலுக்கு ஆதாரமானவை. இங்கு நடைபெறும் கிரியைகள் மனிதனை இறைவன் மீது பற்றும் சமூ கத்தில் ஆன்ம விழிப்புடன் நடைபெறும் உற்சவங்கள் அனைத்தும் ஆன்மீக வெளிப்பாட்டையும் கலையம்சங்களையும் ரசிக்கவைக்கின்றன.

இதன் அடிப்படையில், அழகிய சிற்ப வேலைப்பாடு கொண்ட திருமஞ்சம் அடியவர்களுக்கு திக்கரை முருகனின் அருள் கிடைப்பதற்கு அருமருந்தாக அமையும் எனக் குறிப்பிட்டு இப் போற்றுவதற்குரிய நன்முயற்சியில் ஈடுபட்ட அனைவரையும் பாராட்டி திருமஞ்ச பவனி சிறப்புற எல்லாம் வல்ல முருகப் பெருமானின் பாதங்களைப் பணிந்து என் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**நா.வேதநாயகன்**

## காரைநகர் பிரதேச செயலரின் வாழ்த்து



ஈழ மணித் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள காரைநகர் என்னும் புண்ணிய பூமியாம் களபூமி, திக்கரைக் கிராமத்தில் கோயில் கொண்டு அருளாட்சி செய்து கொண்டிருக்கும் முருகப் பெருமானின் திருமஞ்ச வெள்ளோட்ட சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

காரைநகர் என்னும் புண்ணிய பூமியானது தனக் கெனத் தனித்துவமான பண்பாட்டு விழுமியங்களை அன்று தொட்டு இன்று வரை பேணிப் பாதுகாத்து வருவது யாவரும் அறிந்த விடயமாகும். பார்க்கும் இடமெங்கும் நீக்கமற ஆலயங்கள் காட்சியளிக்கின்றமையும் இங்கு வாழும் மக்கள் சைவ பாரம்பரியம் மிக்கவர்களாக வாழ்ந்து வருகின்றமையும் சமயத்தின் பெருமையை பறைசாற்றி நிற்கின்றது.

அந்தவகையில், களபூமி திக்கரை கிராம மக்கள் ஒன்று கூடி முருகப் பெருமானுக்கு அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய காண்போர் உள்ளத்தில் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும் வகையில் சிற்பியின் கை வண்ணத்தில் அழகிய திருமஞ்சம் வடிவமைக்கப்பட்டு வெள்ளோட்டம் காண இருப்பதையிட்டும் நடைபெற இருக்கும் மஹோற்சவ 5 ஆம் திருவிழா வன்று எம் பெருமான் வள்ளி தெய்வானை சகிதம் அழகிய திருமஞ்சத்தில் எழுந்தருளி அடியவர்கள் இடர்களைய வேண்டியும் இவ்வரிய கைங்கரியத்தில் ஈடுபட்ட ஆலய நிர்வாகத்தினருக்கும் இவ்வூர் மக்களுக்கும் இந்த நாட்டிலுள்ள அனைவருக்கும் அருட்கடாட்சம் கிடைக்க எல்லாம் வல்ல முருகப்பெருமானின் பாதார விந்தங்களை வணங்கி நிற்கின்றேன்.

**திருமதி உஷா சுபலிங்கம்**

## பேராசிரியரின் வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் செழித்து வளரும் காரைநகர் திருவூர் புகழ் மிக்க ஆலயங்கள் பலவற்றை கொண்டதாகும். இவ்வூரிலே களபூமியில் அருளாட்சி செய்கின்ற முருகப்பெருமானுக்கு திருமஞ்சம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் இறையருளால் இன்று நிறைவேறுவது கண்டு எல்லையில்லா ஆனந்தம் அடையும் அடியவர்களுடன் நாமும் இணைந்து கொள்கின்றோம். நீண்ட கால யுத்தத்தால் பல இடப்பெயர்வு களைக் கண்ட காரைநகர் மக்கள், மீண்டும் தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பிய பின்னர் தமது ஊரை அபிவிருத்தி செய்வதில் அக்கறையுடன் ஈடுபட்டிருக்கின்றமையை நான் காண்கின்றேன். அதில் ஓர் அங்கமாக ஆலயங்களைப் புனரமைத்து, அவற்றைப் புதுப்பொழிவுடன் உருவாக்குவதில் அக்கறை செலுத்தி வருகின்றனர். அதன் முக்கிய செயற்பாடாக திக்கரை முருகப் பெருமானுக்குத் திருமஞ்சம் அமைக்க வேண்டுமென அவர்களது பெரு விருப்பம் இன்று கைவரப்பெற்று வெள்ளோட்ட விழாவும் சிறப்பாக இடம்பெறு வதற்குத் திருவருள் பாலித்துள்ளது.

மிகச் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய இத் திருமஞ்சத்தை உருவாக்கிய இச்சிற்பக்கலைஞர்களைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. முருகப் பெருமானின் பெருமைகளை யும் கோயிலின் வரலாற்றை யும் சிற்பங் களாகச் செதுக்கி திருமஞ்சத்தை உரு வாக்கிய சிற்பக் கலைஞர்கள் என்றும் புகழுக்கும், பெருமைக்கும் உரியவர்கள் ஆவர். இதற்கென திருப் பணிக் குழு ஒன்றை உருவாக்கி உற்சாக மாக இயங்கிவரும் ஆசிரியர் திரு.எஸ். சுகந்தன் போன்ற திருப்பணிக் குழுவினருக்கு எனது வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். **பேராசிரியர் க.தேவராஜா.**

## மயிலேறும் முருகன் மஞ்சம் ஏறி வருகிறான்



உலகம் முழுவதாலும் எங்கள் குலதெய்வம் திக்கரை முருகன் ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட திருமஞ்ச பணி நிறைவடைவதை அறிந்து எல்லையற்ற மகிழ்சி கொள்கின்றேன். எமது காரைநகர் மண் வடபுலத்தின் கலை, கலாசாரம், பக்தி ஆகியவற்றின் இருப்பிடமாய்த் திகழ்வது. செந்தமிழ்த் தெய்வமான நம் திக்கரை முருகன் இம் மண்ணில் வாழ்ந்த பலரையும் நல்லபடி வாழ வைத்து அருள் செய்தான். எங்கள் தந்தையார் காலம் தொட்டு முருகனின் திருப்பணிகளில் ஈடுபடும் பேறு எங்கள் குடும்பத்தாருக்குக் கிட்டியது.

அது எம் குலம் செய்த தவம். இப்போது திருமஞ்சம் ஏற்றி நம் திருமுருகனைக் காணும் பணியில் எம் குடும்பத்துக்கும் வாய்ப்புக் கிடைத்தது பற்றி எல்லையற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். முருகன் திருமஞ்சம் ஏறித் திரு உலா வர எங்கள் காரை மண்ணின் சிறப்புக்கள் மேலும் உயரும் என்பதில் ஐயமில்லை. மயிலேறும் முருகன் மஞ்சம் ஏறி எமைக் காக்க வருகிறான். நெஞ்சுருக அன்பரெலாம் அவன் அடி நினைந்து தொழுவோம். இப் பணியில் முன்னின்று உழைத்த அன்பர்கள் அனைவருக்கும் முருகனின் அடிமைகளாய் எம் நன்றியறிதலை உரைத்து மகிழ்கிறோம். வேலுண்டு வினை தீர்க்க மயிலுண்டு எமைக்காக்க

**எஸ்.வி.எம்.குணரத்தினம்**
**(அதிபர், எஸ்.வி.எம். நிறுவனம்)**

...வஹானம்
...ர் நிரப்பு நிலையம்
...ஜயந்தி மாவத்தை,
...னுராதபுரம்.

BE ES EN TRADERS
EG1 CENTRAL ROOD,
COLOMBO -12
T.P 0094 - 11-2730397
0094 -11-2717316


K.S.M. Communication
photo copy, Internet call, colour print, scaning Fax & E- mail Typing
146, Modren Market, Jaffna.
T.P 021 222 3079
021 222 2508

# கல்விக் கதிர் வெளியீடு 04

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்


பொருத்தமற்றஉருவின் கீழ் கோடிடுக

1)



1. 2. 3.

2)



1 2 3

பின்வரும் வாக்கியங்களில் தரப்பட்டுள்ள விவரங்களை கருக்கமாக

(கூறக்கூடியசொல்லின் கீழ் கோடிடுக)

3) புராதனபொருட்கள் பார்வைக்காகவைக்கப்பட்டுள்ள இடம்

1.நூல் நிலையம் 2. அருங்காட்சியகம் 3. காட்சிமண்டபம்

4) வெளியில் இருந்துவீட்டுக்குவந்தஒருவர்

1. நண்பன் 2. விருந்தாளி 3. அயலவர்

5) திசைகளை அறிந்துகொள்ள உதவும் கருவி

1. தொலைநோக்கி 2. நுணுக்குக்காட்டி 3. திசைகாட்டி

6) நதிகடலைச் சேரும் இடம்

1. ஆறு 2. கழிமுகம் 3. குடா

தரப்பட்ட ஐந்து சொற்களில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் இரண்டு இருக்கும் கூட்டத்திற்கு உரிய சொற்களைத் தெரிவுசெய்க.

7) பருப்பு, கடலை, அன்னாசி, பயறு, மாம்பழம்

1. அன்னாசியும், மாம்பழமும்
2. கடலையும், அன்னாசியும்

8) தொலைக்காட்சி, அலுமாரி, வானொலி, பத்திரிகை, மேசை

1. தொலைக்காட்சியும், மேசையும்
2. அலுமாரியும், மேசையும்
3. பத்திரிகையும், அலுமாரியும்

- அடுத்து வரக்கூடிய சொற் கூட்டத்தைத் தெரிவுசெய்க.

9) | திங்கள்,புதன்,வெள்ளி | செவ்வாய்,வியாழன்,சனி | புதன்,வெள்ளி,ஞாயிறு |

(1) வெள்ளி,ஞாயிறு,திங்கள்

(2) வியாழன்,சனி,திங்கள்

(3) வியாழன்,சனி,செவ்வாய்



10) | தை,மார்கழி,மாசி | மாசி,கார்த்திகை,பங்குனி | பங்குனி,ஐப்பசி,சித்திரை |

(1) சித்திரை,ஆவணி,வைகாசி


(2) வைகாசி,புரட்டாதி,ஆனி

(3) சித்திரை,புரட்டாதி,வைகாசி

- வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

11)  எனின்  ............... ஆகும்

1. 2. 3.



12) கப்பல் - கடல் எனின், விமானம் - ............................ ஆகும்

1. விமானநிலையம் 2. ஆகாயம் 3.தரை

பின்வரும் பாடலைக் கொண்டு 13 ஆம், 14 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

பாம்பைக் கண்டால் நடுங்கிடுமே!

பாய்ந்தே ஓடி ஒடுங்கிடுமே!

வீம்பாய் கத்திக் கொட்டிடுமே!

விரோதி கண்ணில் பட்டிடுமே!

13) வீம்பாய் கத்தும் பிராணி எது?

1. பாம்பு 2. தவளை 3. சிங்கம்

14) பாடலில் விரோதி எனப்படும் பிராணி எது?

1. பாம்பு 2. தவளை 3. பல்லி

தடித்த எழுத்துக்களுடைய சொல்லிற்கு மிகப் பொருத்தமுடைய

(சொல்லைத் தெரிவுசெய்க.)

15) நாடாளுமன்ற **உறுப்பினர்கள்** மதிப்பிற்கு உரியவர்கள்

(1) ஊதாரிகள் (2) அங்கத்தவர்கள் (3) உயிரானவர்கள்

16) யாழ்ப்பாணம் **வடகிழக்கு** பருவபெயர்ச்சிக் காற்றினால் மழையைப் பெறுகின்றது.

1. வாயு மூலைத்திசை
2. நிருத்தி மூலைத்திசை
3. ஈசானமூலைத் திசை

7) இளமையிற் கல்விசிலையில் எழுத்து என்பது

1. திருக்குறள் 2. பழமொழி 3. மரபுத்தொடர்

8) தொற்றுநோய் பரவும்போது உடனடியாக யாருக்கு அறிவிக்கவேண்டும்.

1. மருத்துவமனையின் மருத்துவ அலகுக்கு
2. பொதுச் சுகாதாரப் பரிசோகதருக்கு
3. பாடசாலை அதிபருக்கு

19) எல்லை மீறினால் ஆபத்து என்ற கருத்தைத் தரும் பழமொழி

1. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு
2. அடாது செய்பவர் படாதுபடுவர்
3. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

20) ஆசிரியர் தொடர்பாகக் கூறக்கூடிய ஒன்றாக அமைவது

1. அன்பானவர் 2. கோபமானவர் 3.கற்றுத் தருபவர்

21) இலங்கையின் தேசியகீதத்தை இயற்றியவர்

1. கலாநிதி .சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா
2. ஆனந்தசமரக்கோன்
3. கலாநிதி ஆனந்தசமரக்கோன்

- **"?", "★" இடப்பட்ட இடங்களுக்குப் பொருத்தமானஎண்களைத் தெரிவுசெய்க.**

22)

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 6 | 3 | 14 | (1) 12, 13 |
| 4 | 7 | 2 | ★ | (2) 13, 12 |
| 3 | 8 | 1 | ? | (3) 13, 11 |
| 12 | 21 | 6 | | |

23)

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 6 | (1) 8, 10 |
| 2 | 3 | 4 | ★ | (2) 24, 60 |
| 3 | 4 | 5 | ? | (3) 60, 24 |
| 6 | 24 | 60 | | |

# கருணாவை அழைத்து அமைச்சு பதவி வழங்கியபோது பூனைக்குட்டிகளை போல் சகலரும் வேடிக்கை பார்த்தனர்


மரிக்கார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 07

அரந்தலாவையில் பிக்குவை கொன்ற கருணாவை அழைத்து வந்து கட்சியில் உப தலைவர் பதவியைக் கொடுத்து, அமைச்சு பதவிகளை வழங்கிய போது பூனைக்குட்டிகளைப் போல் அனைவரும் வேடிக்கை பார்த்தனர் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

ஹிட்லரை ஆட்சிக்கு கொண்டு வர முயற்சிப்போர் தேசிய பாதுகாப்பு தொடர்பில் பூச்சாண்டிகளை உருவகித்து காட்டுகின்றனர். அவர்கள் கூறுவது போல் தேசிய பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் அரசமைப்பு சட்டத்திற்கு முரணாக செயற்பட்டிருந்தால், சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்று அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும்.

தென்பகுதி தலைவர்கள் எப்போதும் வடக்கு மக்களை ஏமாற்றி வந்துள்ளனர். அதேபோல் வடக்கின் அரசியல் தலைவர்கள் கருவேப்பிலையாக இருக்காமல், தமது பிரச்சினைகளை தீர்த்து கொள்ள வேண்டும்.

எமது அரசின் கீழ் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு நெஞ்சை நிமிர்த்தி பேச முடியும். எதிர்க்கட்சியை சேர்ந்த சிலர் இதனை பயன்படுத்தி மகிழ்ச்சியில் ஆட்டம் போட பார்க்கின்றனர்.

அரந்தலாவையில் பிக்குவை கொன்ற கருணாவை அழைத்து வந்து க்ட்சியில் உப தலைவர் பதவியை கொடுத்து, அமைச்சு பதவிகளை வழங்கிய போது பூனைக்குட்டிகளை போல் வேடிக்கை பார்த்தனர்.

பிள்ளையானை கிழக்கு மாகாண முதலமைச்சராக நியமிக்கும் போது இவர்கள் பூனைக் குட்டிகளை போல் வேடிக்கை பார்த்தனர்.

எனினும், நாட்டுக்கு துரோகம் இழைக்கும் எதுவாக இருந்தாலும் எதிர்க்கும் உரிமை எமது அரசின் கீழ் கிடைத்துள்ளது. இதனால், சீன நிறுவனம் வழங்கியதாக கூறப்படும் 7.6 மில்லியன் பொலர் பணம் தொடர்பான பிரச்சினைகளை வெறுமனே விட்டு விட முடியாது. அப்படி செய்ய நாங்கள் இடமளிக்க மாட்டோம்.

தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதை நாங்கள் நம்புகிறோம். எனினும் மீண்டும் ஆயுதங்களை கையில் எடுக்கும் குழுக்கள் உருவாக வேண்டும் என்பது பிரச்சினை தீர்வுகாணும் முறையல்ல.

முழு நாட்டில் உள்ள பிரச்சினைகளை மறந்து விட்டு வடக்கிற்கு மட்டும் அபிவிருத்தியையும் தொழில் வாய்ப்புகளையும் வழங்க முடியாது எனவும் எஸ்.எம். மரிக்கார் குறிப்பிட்டுள்ளார்.

## க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அடுத்த வாரம்

கொழும்பு, ஜூலை 07

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அடுத்த வாரம் விநியோகிக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி.சனத் பூஜித்த அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளன. இந்தப் பரீட்சைகள் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி நிறைவடையவுள்ளன.

இந்தப் பரீட்சைக்கான நேர அட்டவணை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் மூன்று லட்சத்து 21 ஆயிரத்து 469 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை தமிழரிற்கு புகலிடம் வழங்க ஜப்பான் நீதிமன்றம் உத்தரவு!

ஜப்பானின் நீதியமைச்சினால் புகலிடக்கோரிக்கை மறுக்கப்பட்ட இலங்கை தமிழர் ஒருவரிற்கு புகலிடம் வழங்குமாறு டோக்கியோவின் மாவட்ட நீதிமன்றமொன்று உத்தரவிட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு ஜப்பானில் புகலிடம் கோரி விண்ணப்பித்த நபருக்கு சாதகமாகவே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்த நபர் இலங்கையில் தனது உயிருக்கு ஆபத்துள்ளது என தெரிவித்து புகலிடக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்த நபர் கனடாவுக்கு செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த வேளை அவரிடம் உரிய விசா இல்லாததால் ஜப்பானில் அதிகாரிகள் அவரைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்

அதனை தொடர்ந்து அவர் ஜப்பானில் புகலிடம் கோரியுள்ளார்.

எனினும் 2006 டிசெம்பரில் இவரது புகலிடக்கோரிக்கையை ஜப்பான் நிராகரித்துள்ளது.

இதன் பின்னர் இந்த நபர் 2007 இல் ஓசாகா மாவட்ட நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளார். அந்த நீதிமன்றம் 2011 இல் குறிப்பிட்ட இலங்கைத் தமிழருக்கு சார்பாக தீர்ப்பு வழங்கியுள்ளது. எனினும் நீதிமன்ற தீர்ப்பினை ஜப்பானின் நீதியமைச்சு ஏற்க மறுத்துள்ளது.

இதனை தொடர்ந்து இந்த நபர் ஜப்பான் அரசக்கு எதிராக தாக்கல் செய்த மானநஷ்ட வழக்கை விசாரணை செய்துள்ள நீதிமன்றம் குறிப்பிட்ட நபர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால் அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என தெரிவித்துள்ளது.

## ஹஜ் யாத்திரையை குழப்புவதற்கு சதி!

ஹஜ் யாத்திரிகையினை குழப்புவதற்கு ஒரு சிலர் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தபால் சேவை மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் எம்.எச்.ஏ ஹலீம் சபையில் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில்

ஹஜ் யாத்திரிகைக்கான முகவர் பதிவின்போது மோசடிகள் இடம்பெற்றதாக ஒரு சில முகவர் அமைப்புகள் குற்றம் சுமத்தி வருகின்றன. எனினும் ஹஜ் யாத்திரிகைக் கான முகவர் பதிவு விடயத்தில் எந்தவொரு மோசடியும் நடக்கவில்லை. ஹஜ் யாத்திரிகையினை குழப்புவதற்கு ஒரு சிலர் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## விஜயகலாவால் தொடர்ந்து எம்.பியாக இருக்க முடியுமா?

### விமல் வீசவன்ச சபையில் கேள்வி



கொழும்பு, ஜூலை 07

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க முடியுமா? இது தொடர்பில் சபாநயாகர் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீசவன்ஸ சபையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளமையின் காரணமாக உணர்ச்சிவசப்பட்டு விஜயகலா மகேஸ்வரன் மீண்டும் புலிகள் வேண்டும் என கூறியுள்ளார். இந்த கருத்தினூடாகதான் அவர் அரசமைப்பினை மீறியுள்ளமை தெட்டத் தெளிவாகியுள்ளது.

இவ்வாறான நிலையில் அவரலால் நாடாளுமன்ற உறுப்பினராக தொடர்ந்து இருக்க முடியுமா? தமிழ் மக்களின் ஏனைய பிரச்சினைகள், சாதாரண மக்களின் இன்னல்களை பற்றி பேசினால் எமக்கு பிரச்சினை இல்லை. என்றாலும் பயங்கரவாதத்தை உருவாக்க முனையும் கருத்தானது பெரும் தவறாகும். ஆகவே இது தொடர்பில் சபாநாயகர் என்ற வகையில் உங்கள் நடவடிக்கை என்ன? என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜெனீவாவில் கோட்டாபயவுக்கு எதிராக வெள்ளை வான் கடத்தல் முறைப்பாடு!



கொழும்பு, ஜூலை 07

தனது தந்தையை வெள்ளை வானில் கடத்திச் சென்றார் என தெரிவித்து பிரான்சிலுள்ள 17 வயதுடைய இளைஞன் ஒருவர் ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

தனக்கு 8 வயதாக இருக்கும் போது கடந்த 2008 ஆம் ஆண்டு கொழும்பு கருவாத்தோட்டப் பகுதியில் வாகனத்தில் சென்று கொண்டிருக்கும் போது பின்னால் வந்த வாகனமொன்று தமது வாகனத்தை நிறுத்தி, தந்தையைக் கடத்திச் சென்றது என அந்த இளைஞன் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த மே மாதம் நடைபெற்ற ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் ஜெயனி தியாகராஜா எனும் யுவதியொருவர் தனது சகோதரரின் கடத்தல் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கு எதிராக முறைப்பாடொன்றைப் பதிந்திருந்ததாகவும் கூறப்படுகின்றது.

இந்த இளைஞனை பிரான்சிலுள்ள தமிழீழ அமைப்பொன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைத்து வந்துள்ளது என குறிப்பிடப்படுகின்றது.

## எரிபொருள் தட்டுப்பாடு நிலவில்லை; பெற்றோலியக் கூட்டுத்தாபனம்!

நாட்டின் எந்தப் பாகத்திலும் எரிபொருள் தட்டுப் பாடு நிலவில்லை என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மோட்டார் வாகன சாரதிகளுக்கு இது விடயம் தொடர்பில் தெளிவான தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் போதியளவு எரிபொருள் இருப்பதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. ஏதாவதுது ஒரு எரிபொருள் நிலையத்தில் வேண்டப்படும் எரிபொருள் மறுக்கப்பட்டால், கூட்டுத்தாபனத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 0115 455 130 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி கூட்டுத்தாபனம் பொது மக்களை கேட்டுள்ளது.

இந்தத் தொலைபேசி சேவை 24 மணிநேரமும் இயங்கும் ஒரு சேவையாகும் என்றும் இலங்கை பெற் றோலியக் கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.

(க)

# பாகிஸ்தானில் கோர விபத்து: 6 பேர் பலி; 15 பேர் காயம்



இஸ்லாமாபாத், ஜூலை 07

பாகிஸ்தானில் லொறி மற்றும் பஸ் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் பரிதாபமாக சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் அமைந்துள்ள ரஹிம் - யார் - கான் மாவட்டம் ஃபடாபூர் அருகே வீதியில் சென்றுகொண்டிருந்த பயணிகள் பஸ் மீது, எதிரே வந்த லொறி மோதியது.

இதில், 6 பேர் பரிதாபமாக சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். மேலும், 15 இற்கும் மேற்பட்டோர் பலத்த காயங் களுடன் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

விபத்து நிகழ்ந்த இடத்தில் மீட்புக் குழுவினர் விரைந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டனர் விபத்திற்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணையில் ஈடு பட்டுள்ளனர்.

# தாய்லாந்தின் சுற்றுலா தீவு அருகே படகு கவிழ்ந்து விபத்து: 20 பேர் மாயம்

பாங்கொக், ஜூலை 07

தாய்லாந்தில் 90 பேரை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 20 பேரின் கதி தெரியவில்லை.

தாய்லாந்தின் சுற்றுலாத் தீவான புக்கெட் அருகே நேற்றுமுன்தினம் மாலை 90 பேரை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், பலர் மீட்கப்பட்டு விட்டாலும் 20 பேர் காணாமற்போயினர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மீட்புப் பணி தொடர்ந்து நடந்து வருகிறது என அந்நாட்டு பேரிடர் துறை அறிவித்துள்ளது.

# மெக்சிகோ பட்டாசு சந்தையில் வெடி விபத்து; 17 பேர் உயிரிழப்பு!

மெக்சிகோ நகரில் உள்ள பட்டாசு சந்தையில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி இதுவரை 17 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மெக்சிகோ நாட்டின் மத்திய பகுதியில்மிகப்பெரிய பட்டாசுச்சந்தை அமைக்கப்பட்டிருந்தது. அங்கு பட்டாசு விற்பனை அதிகளவில் நடைபெற்று வந்தமையால் பட்டாசுகளை வாங்க மக்கள் குவிவது வழக்கம்.

இந்த நிலையில், மெக்சிகோ பட்டாசு சந்தையில் நேற்றுமுன்தினம் காலை 9.15 மணியளவில், திடீரென்று பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. அங்கு கடைகளில் வைக்கப்பட்டிருந்த பட்டாசுகள் வெடித்துச் சிதறின. இதனால் அங்கிருந்த மக்கள் அலறியடித்து ஓடினர்.

இந்த வெடி விபத்தில் 17 பேர் உடல்



சிதறிப் பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

தகவலறிந்து அங்கு சென்ற மீட்புப் படை அதிகாரிகள் காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைகளில் சேர்ந்துள்ளனர். அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# சுதந்திரதேவி சிலை மேல் ஏறிய பெண் மீது வழக்கு

நியூயோர்க், ஜூலை 07

அமெரிக்காவில் பிரசித்தி பெற்ற சுதந்திரதேவி சிலை மேல் ஏறிய பெண் மீதுபொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

அமெரிக்காவில் லிபர்டி தீவில் சுதந்திர தேவி சிலை உள்ளது. பிரசித்தி பெற்ற இந்த சிலை, 19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவுக்கு பிரான்ஸ் நாட்டால் வழங்கப் பட்டதாகும். தினந்தோறும் ஆயிரக் கணக்கான சுற்றுலா பயணிகள் இந்த சிலையை காண்பதற்காக செல்வது வழக்கம்.

இந்த நிலையில் கடந்த புதன் கிழமை உள்ளூர் நேரப்படி மாலை 3.30 மணியளவில் பெண் ஒருவர் அந்த சிலை பீடத்தின் மீது திடீரென ஏறத் தொடங்கினார்.

பொலிஸார் அந்தப் பெண்ணிடம் பேச்சு நடத்தி கீழே இறங்கி வரச்செய்து காவலில் வைத்து



விசாரித்தனர்.

இதில் அந்தப் பெண்ணின் பெயர் தெரேஸ் பேட்ரிசியா ஒகூமு (வயது 44) எனவும், அமெரிக்க எல்லையில் சட்ட விரோதமாக நுழைகிற தம்பதியரையும், அவர்களது குழந்தைகளையும் ட்ரம்ப் நிர்வாகம் பிரித்ததால் மன உளைச்சலில் சிக்கித் தவித்து வந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

தனது செயலுக்காக அந்தப் பெண், பொலிஸ் அதிகாரிகளிடம் மன்னிப்பு கேட்டார். இருப்பினும் அவர் மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

இந்த விவகாரம் குறித்து நியூயோர்க் மேயர் பில் டி பிளேசியோவின் செய்தி தொடர்பாளர் கூறும் போது -

நியூயோர்க் அழகான நகரம். இந்த நகர பொலிஸார், எந்த விஷயத்தையும் சரியாக கையாளுவார்கள் என்றார்.

இந்த சம்பவத்தின்போது, அங்கு இருந்த சுற்றுலா பயணிகள் வெளியேற்றப்பட்டமையால் பரபரப்பு ஏற்பட்டது.

இருப்பினும் பலரும் அந்தப் பெண், சுதந்திர தேவி சிலை பீடத்தின் மீது ஏறியதை படம் பிடித்து சமூக வலைத்தளங்களில் வெளியிட அது 'வைரல்' ஆக பரவியது.

# ஊழல் வழக்கில் இந்தோனேசிய ஆளுநர் கைதானார்

இந்தோனேசியாவில் அரசு நிதியை சட்டவிரோதமாக திட்டங்களின் பெயரால் சுருட்டி ஊழலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஆளுநர் இரவாண்டியூசுப ஊழல் தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தோனேசியாவில் ஆஷேமாகாணத்தில், முதன் முதலாக மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டு ஆளுநர் பதவியில் இருந்து வந்தவர், இரவாண்டி யூசுப். இவர் முன்னாள் கிளர்ச்சியாளர் ஆவார்.

தேசத்துரோக குற்றச்சாட்டின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த இவர், 2004 ஆம் ஆண்டு சுனாமி தாக்கியபோது, சிறையில் இருந்து தப்பித்தவர் என்பது நினைவு கூரத்தக்கது. பின்னர் இவர் அரசுடனான சமரச உடன்படிக்கைக்கு பின்னர் தேர்தலில் போட்டியிட்டு ஆளுநர் ஆனார்.

இவர் 500 மில்லியன் டொலருக்கும் (சுமார் ரூ.3,400 கோடி) மேற்பட்ட அரசு நிதியை சட்ட விரோதமாக திட்டங்களின் பெயரால் ஊழலில் ஈடுபட்டார் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது தொடர்பாக இவர் மீது ஊழல் தடுப்பு பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்த நிலையில், இவரை ஊழல் தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த ஆஷேமாகாணம், தன்னாட்சி அதிகாரம் பெற்று, இங்கு இஸ்லாமிய மதச்சட்டம் அமுலில் இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாக். முன்னாள் பிரதமர் அப்பாசி தேர்தலில் போட்டியிடலாம்

## லாகூர் உயர்நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் அப்பாசி, ராவல்பிண்டி -1 தொகுதியில் போட்டியிட லாகூர் உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கி தீர்ப்பு அளித்துள்ளது.

மேலும் அவர் மீது தேர்தல் தீர்ப்பாயம் பிறப்பித்த தடை ரத்து செய்யப்பட்டது.

பாகிஸ்தானில் எதிர்வரும் 25 ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் நடக்கிறது. இந்த தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியை பிடிக்க பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்), பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி, முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்ரிக், இன்சாப் கட்சி என 3 கட்சிகள் இடையேயும் பலத்த போட்டி நிலவி வருகிறது. இதனால் அங்கு தேர்தல் பிரசாரத்தில் அனல் பறக்கிறது.

இந்த நிலையில், ராவல்பிண்டி - 1 தொகுதியில் போட்டியிட முன்னாள் பிரதமர் அப்பாசி (பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ்) வேட்பு மனுத்தாக்கல் செய்தார்.

ஆனால் அவர் நேர்மையானவர் அல்லர், மதிநுட்பம் மிகுந்தவர் அல்லர் என்று கூறி வாழ்நாள் தடை விதித்து, அவர் ராவல்பிண்டி -1 தொகுதியில் போட்டியிடுவதற்கு தடை விதித்து பஞ்சாப் மாகாணதேர்தல்தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

இந்த தீர்ப்பை எதிர்த்து அப்பாசி, லாகூர் உயர்நீதிமன்றில் மேல்முறையீடு செய்தார். இந்த மேல்முறையீட்டின் மீது நீதிபதி மஜாகிர் அலீ அக்பர் நக்வி தலைமையில் 2 நீதிபதிகள் அமர்வு முன் நேற்று முன்தினம் விசாரணை நடந்தது.

இந்த வழக்கில் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்ட நிலையில், தொகுதி தேர்தல் அதிகாரி தனது பதில் மனுவை நீதிபதி மஜாகிர் அலி அக்பர் நக்வியிடம் தாக்கல் செய்தார்.


இந்த நிலையில் விசாரணையின் போது, அப்பாசி சார்பில் ஆஜரான வழக்கறிஞர், வேட்பு மனுவில் கேட்கப்பட்டு உள்ள எல்லா கேள்விகளுக்கும் அப்பாசி பதில் அளித்து உள்ளார். அப்படி இருந்தும், சட்டத்துக்கு முரணாக அவருக்கு எதிராக இப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டு உள்ளது. தனது சொத்து விவரங்கள் அனைத்தையும் அவர் தந்துள்ளார் என்று கூறினார்.

மேலும், தேர்தல் தீர்ப்பாயம் தனது வரம்பை மீறி உள்ளது, ஒன்று வேட்பு மனுவை ஏற்க வேண்டும் அல்லது நிராகரிக்க வேண்டும். அதற்குத்தான் தேர்தல் தீர்ப்பாயத்துக்கு அதிகாரம் இருக்கிறது. வாழ்நாள் தடை விதிக்க அதிகாரம் இல்லை என்றும் அவர் வாதிட்டார். முடிவில் பஞ்சாப் தேர்தல் தீர்ப்பாய உத்தரவை ரத்து செய்து, அப்பாசி ராவல்பிண்டி - 1 தொகுதியில் இருந்து போட்டியிட அனுமதி அளித்து நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினர்.

இதே போன்று இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சி சார்பில் ஜீலம் (என்.ஏ 67) தொகுதியில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்து இருந்த பவாத் சவுத்ரிக்கும் பஞ்சாப் தேர்தல் தீர்ப்பாயம் வாழ்நாள் தடை விதித்து இருந்தது. அவரும் லாகூர் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். அந்த வழக்கும் நீதிபதி மஜாகிர் அலி அக்பர் நக்வி தலைமையில் 2 நீதிபதிகள் அமர்வு முன் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

இரு தரப்பு வாதத்துக்கு பின்னர் அவர் மீதான வாழ்நாள் தடையையும் நீதிபதிகள் ரத்து செய்து தீர்ப்பு வழங்கினர். அவர் ஜீலம் தொகுதியில் போட்டியிட அனுமதியும் அளித்துள்ளனர்.

## வயலில் மந்திரங்களை உச்சரித்தால் விளைச்சல் பெருகும்! விவசாயிகளுக்கு விவசாயத்துறை அமைச்சர் அறிவுரை



நெல் வயலில் மந்திரங்களைத் தொடர்ந்து உச்சரித்துக் கொண்டிருந்தால் விளைச்சல் அதிகரிக்கும் என விவசாயிகளுக்கு கோவா மாநில விவசாயத் துறை அமைச்சர் அறிவுரை கூறியுள்ளார்.

கோவாவில் பா.ஜ.க. தலைமையிலாக கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. மனோகர் பாரிக்கர் முதல் அமைச்சராக இருந்து வருகிறார். கூட்டணி கட்சியான கோவா முற்போக்கு கட்சியைச் சேர்ந்த விஜய் சர்தேசாய் விவசாய துறை அமைச்சராகவுள்ளார்.

கோவாவைச் சேர்ந்த, சிவ யோகா பவுண்டேன் என்ற அமைப்பு, அண்டவெளி விவசாயம் என்ற புதிய விவசாய முறையை அறிமுகப்படுத்தி உள்ளது. இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்த அமைச்சர் விஜய் சர்தேசாய் பேசியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்தவைமாறு -

அண்டவெளி விவசாயத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்கள் பாதுகாப்பானவை; அவை ரசாயன உரங்கள் கலக்காமல் நச்சுத்தன்மை அற்றதாக இருக்கும். விவசாயிகள் தங்கள் வயல்வெளியில் நின்று தொடர்ந்து 30 நிமிடங்கள் வேத மந்திரங்களை உச்சரிக்க வேண்டும்.

இப்படி சொல்லும்போது அதிலிருந்து உருவாகும் அண்ட சக்தியால் நெற்பயிர்கள் அமோகமாக விளைச்சல் கொடுக்கும். இதற்கு சிவயோகவிவசாயம் என்றுபெயர். இந்த முறையினால் ஏராளமான விவசாயிகள் பயனடைந்து உள்ளனர். இது எதிர்காலத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றார். இவரது இந்த பேச்சு சமூகவலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

## ஹில்சா மலைப் பகுதியில் இருந்து மேலும் 275 இந்தியர்கள் மீட்பு!



மானசரோவர் யாத்திரை சென்று நிலச்சரிவில் சிக்கிய மேலும் 275 இந்தியர்கள் நேபாளத்தின் ஹில்சா மலைப்பகுதியில் இருந்து பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர் என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மானசரோவருக்கு புனித யாத்திரை மேற்கொண்ட இந்திய பக்தர்கள் 1,500 பேர் நேபாளத்திலும், சீனாவின் திபெத்திய பகுதியிலும் மோசமான வானிலை காரணமாக பரிதவித்து வருகின்றனர்.

நேபாளத்தில் நிலச்சரிவில் சிக்கி தவிக்கும் இந்திய பக்தர்களை மீட்க பாதுகாப்பு துறை ஒத்துழைப்பு வழங்கும் என இந்திய பாதுகாப்பு துறை மந்திரி நிர்மலா சீதாராமன் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே, கைலாஷமான சரோவர் யாத்திரை சென்றபோது நிலச்சரிவில் சிக்கித் தவித்த 250 இந்தியர்களை நேபாளத்தின் ஹில்சா மலைப்பகுதியில் இருந்து பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர் என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஹில்சா பகுதியில் சிக்கித் தவித்த இந்திய பக்தர்கள்மேலும் 275 பேர் ஹெலிகாப்டர்கள்மூலம் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

இது தொடர்பாக நேபாள இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்தியில் -

கடந்த 3 நாள்களில் மட்டும் இந்திய பக்தர்கள் 675 பேர் ஹில்சாவில் இருந்து சிமிகோட் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த 3 நாள்களில், மீட்புப் பணியில் 53 சிறிய விமானங்களும், ராணுவ ஹெலிகாப்டர்கள் உள்ளிட்ட ஹெலிகாப்டர்களும் 142 முறை ஈடுபடுத்தப்பட்டது. ஹில்சா, சிமிகோட்டுக்கு இடையே தொடர்ந்து மீட்புப் பணி நடைபெறுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்டெர்லைட் ஆலை திறக்கப்படாததை உறுதி செய்யவேண்டும்: சரத்குமார்

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை மீண்டும் திறக்கப்படாததை உறுதி செய்யும் வகையில் தமிழக அரசின் நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்று சரத்குமார் வலியுறுத்தியுள்ளார்.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் இது வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

ஸ்டெர்லைட் நச்சு ஆலையை மூடக்கோரி அப்பகுதி மக்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக எடுக்கப்பட்ட நடவடிக்கையில், கடந்த மே 28 ஆம் திகதி ஆலையை நிரந்தரமாக மூடி தமிழக அரசு அரசாணை பிறப்பித்திருந்ததை வரவேற்கிறோம்.

தற்போது ஆலையை மீண்டும் திறக்கக் கோரி தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவில், தமிழக அரசின் அரசாணை மீது இடைக்காலத் தடை விதிக்க இயலாது என தேசிய பசுமை தீர்ப்பாயம் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. எனினும் வரும் 18 ஆம் திகதிக்குள் ஸ்டெர்லைட் ஆலை குறித்து பதிலளிக்க தமிழக அரசுக்கு தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், ஸ்டெர்லைட் ஆலை மீண்டும் திறக்கப்படாததை உறுதி செய்யும் வகையில் தமிழக அரசின் நடவடிக்கைகள் அமைய வேண்டும். மேலும் தீவிர மக்கள் போராட்டத்துக்கும், 13 பேரின் உயிர் தியாகத்துக்கு பிறகும் கிடைக்கப்பெற்ற தீர்வு, நிரந்தரத்தீர்வாக அமையுமாறு சட்டரீதியில் இப்பிரச்சினையை அணுக வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## சென்னை டி.ஜி.பி. அலுவலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்



சென்னையில் உள்ள டி.ஜி.பி. அலுவலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதை அடுத்து அலுவலக வளாகத்தில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை கடற்கரை சாலையில் தமிழக காவல்துறை தலைமை இயக்குநர் (டி.ஜி.பி) அலுவலகம் உள்ளது. பாதுகாப்பு மிகுந்த இந்த அலுவலத்திற்குள் வெடிகுண்டு வைத்திருப்பதாக நேற்று மிரட்டல் வந்துள்ளது. காவல் துறையின் கட்டுப்பாட்டு அலுவலகத்துக்கு தொலைபேசியில் பேசிய மர்மநபர், வெடிகுண்டு வைத்திருப்பதாக கூறிவிட்டு தொடர்பை துண்டித்துள்ளான்.

இதனையடுத்து பொலிஸார் உஷார்படுத்தப்பட்டனர். டி ஜி.பி. அலுவலகத்தில் சோதனை செய்யப்பட்டது. மேலும், மிரட்டல் விடுத்த நபர் பேசிய தொடர்பு எண்ணை வைத்து, அந்த நபரை அடையாளம் காணும் முயற்சியிலும் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

## மகளிர் வாழத் தகுதியற்ற மாநிலமாக தமிழகம் மாறி வருகிறது - ராமதாஸ்

மகளிர் வாழத் தகுதியற்ற மாநிலமாக தமிழகம் மாறிக்கொண்டிருக்கிறது என பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.


இதுதொடர்பாக ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழ்நாட்டில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் அதற்கு காரணமானவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த புள்ளிவிவரங்களைப் பார்க்கும் போது பெண்களும், குழந்தைகளும் வாழ்வதற்கு தகுதியற்ற மாநிலமாக தமிழகம் மாறிக்கொண்டிருப்பதை உணர முடிகிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் கட்டுப்படுத்த ஆட்சியாளர்கள் தவறியது கண்டிக்கத்தக்கது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகளை எடுக்க ஆணையிடக்கோரி உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள பொதுநல வழக்கில், தமிழக அரசின் தலைமைச் செயலரும், காவல்துறை தலைமை இயக்குநரும் தாக்கல் செய்துள்ள புள்ளி விவரங்களில் தான் மகளிரும், குழந்தைகளும் தமிழகத்தில் எந்த அளவுக்கு ஆபத்தான சூழலில் உள்ளனர் என்பது குறித்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

பெண்களுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாக இருப்பது ஒருபுறமிருக்க, இத்தகைய குற்றங்களைச் செய்தவர்களில் 95 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் தண்டனை பெறாமல் தப்பி விடுகின்றனர் என்பது தான் அதிர்ச்சியளிக்கும் உண்மையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கள்ள நோட்டு அச்சடித்த கேரள ரி.வி. நடிகை கைது



வீட்டில் கள்ள நோட்டு அச்சடித்த கேரள சின்னத்திரை நடிகை சூர்யா, அவரது தாய், சகோதரி ஆகியோரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கேரளாவின் பிரபல சின்னத்திரை நடிகை சூர்யா. பல்வேறு ரி.வி. தொடர்களில் நடித்துள்ளார். இந்த நிலையில் கள்ள நோட்டு அச்சடித்த இவரையும் இவரது குடும்பத்தினரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதுகுறித்து கொல்லம் இன்ஸ்பெக்டர் தெரிவிக்கையில் -

சூர்யாவின் வீட்டில் ரூ.2 லட்சம் கள்ள நோட்டுகள், இதை அச்சடிப்பதற்கான தாள்கள், பிரின்டர்களை கைப்பற்றியுள்ளோம். இடுக்கியில் பிடிபட்ட கள்ளநோட்டு கும்பல் அளித்த தகவலின்படி சூர்யாவும் அவரது குடும்பத்தினரும் சிக்கினர்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் முதல் கள்ள நோட்டு அச்சடித்தோம் என அவர்கள் ஒப்புக்கொண்டனர். தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்ய இதை செய்துள்ளனர். போலி சாமியார் ஒருவருடன் ஏற்பட்ட சந்திப்பை தொடர்ந்து சூர்யாவுக்கு கள்ளநோட்டு கும்பலுடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் ராணுவ ஆட்சி நடக்கிறது: தினகரன்



தமிழகத்தில் ராணுவ ஆட்சி நடக்கிறது என திருவண்ணாமலையில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத் துணை பொதுச் செயலாளர் டிடிவி. தினகரன் கூறியுள்ளார்.

திருவண்ணாமலையில் டி.டி.வி. தினகரன் இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்-

சென்னை - சேலம் 8 வழி பசுமை விரைவு சாலைக்கு மத்திய அரசு மும்முரம் காட்டுகிறது. முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இந்த சாலை திட்டத்தை போராடி பெற்றது எனவும் இச்சாலை அமைந்தால் பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழிற் வளர்ச்சி பெருகும் என ஒரு முறை கூறினார்.

சேலம் விமான நிலையத்தில் பேட்டி அளிக்கும்போது பசுமை சாலை மத்திய அரசு கொண்டு வந்த திட்டம். மாநில அரசு நிலத்தை ஆர்ஜிதம் மட்டுமே செய்து கொடுக்கிறது என்றார். இப்போது எடப்பாடி பழனிசாமி மாறிமாறி பேசுகிறார்.

பொதுமக்கள் மற்றும் பத்திரிகையாளர்களின் பேச்சு, கருத்து, எழுத்து சுதந்திரம் பறிக்கப்படுகிறது. கருத்து தெரிவிப்பவர்கள் மீது வழக்கு போடுகின்றனர். குரல்வளையை நெரிக்கின்றனர். தமிழகத்தில் ராணுவ ஆட்சி நடக்கிறது.

அம்மாவின் ஆட்சி நடப்பதாக எடப்பாடி கூறுகிறார். இது அம்மாவின் ஆட்சியே கிடையாது. 18 எம்.எல்.ஏ.க்களுக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறேன். இந்த வழக்கால், எடப்பாடி அரசு தப்பித்து கொண்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



## விஜயகலாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற நிகழ்வொன்றில், புலிகளை மீள உருவாக்க வேண்டுமென விஜயகலா மகேஸ்வரன் உரையாற்றியிருந்தார்.

இந்த உரையால் தெற்கில் கடும் எதிர்ப்பு எழுந்ததுடன், நாடாளுமன்றத்திலும் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன.

அத்துடன் விஜயகலாவின் உரை குறித்து விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனை அடுத்து தனது இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமா செய்கிறார் என விஜயகலா நேற்றுமுன்தினம் மாலை அறிவித்திருந்தார்.

இந்நிலையில் அவருக்கு ஆதரவாக குடாநாட்டின் பல இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு அன்று உயிர் துறந்தவர் மகேஸ்வரன். இன்று பதவி துறந்தவர் விஜயகலா என்று குறிப்பிட்டே இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ஐ-7)

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சிங்கப்பூர் நோக்கிப் பயணமாகிறார்.

அத்துடன் அங்கு இடம்பெறும் சிங்கப்பூர் சர்வதேச நீர் வார நிகழ்வு, தூய்மையான சூழல் மாநாடு ஆகியவற்றில் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

பிரதமரின் இந்த விஜயத்தின்போது சிங்கப்பூர் பிரதமர் லீ சின் லூங், பிரதிப் பிரதமர் மற்றும் அமைச்சர் தர்மன் சண்முகரத்னம், சிங்கப்பூர் முன்னாள் பிரதமர் கோ சொக் டொன் உள்ளிட்ட சிங்கப்பூர் அரஇன் உயர் மட்ட அமைச்சர்கள் பலரையும் அவர் சந்திக்கவுள்ளார்.

அத்துடன், ஜூலை 09 ஆம் திகதி சர்வதேச நகர மாநாட்டின் ஆரம்ப அமர்வில் 'நகர அபிவிருத்தி மற்றும் சூழலைப் பாதுகாத்தல்' எனும் தலைப்பில் பிரதமர் உரையொன்றை நிகழ்த்துவார். (ஐ)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

நாடாளுமன்றத்தில் நேற்று மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளுக்கான பதவிக்காலம் கடந்த ஒக்ரோபர் மாதத்துடன் நிறைவடைந்துள்ளன. மேலும் மூன்று சபைகளின் பதவிக் காலம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துடன் நிறைவடையவுள்ளது.

இந்நிலையில், மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாது தொடர்ந்து இழுத்தடிக்கப்பட்டு வருவதானது ஜனநாயகத்தையும், மக்களின் உரிமைகளையும் மீறும் செயலாகும்.

மாகாணசபை திருத்தச்சட்ட மூலத்துக்கு அமைய எல்லை நிர்ணய அறிக்கை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் சபையில் சமர்ப்பிக்கப்படவேண்டும். இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அப்படி நிறைவேற்றப்படாத பட்சத்தில் சபாநாயகர் தலைமையில் மீளாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும்– என்றார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்றைய தினம் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல் மற்றும் தேர்தல் முறைகள் பற்றிய சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது நீண்டகால அர்ப்பணிப்புடன் கூடிய போராட்டத்தின் பயனாக எமக்குக் கிடைத்துள்ள மாகாண சபை முறைமையை நாம் ஒரு பொன்னான வாய்ப்பாகவே கருதி வருகின்றோம்.

இந்த அரசு ஆட்சிப்பீடமேறிய காலந்தொட்டு புதிய அரசியல் யாப்பு தொடர்பில் கூறப்பட்டு வந்துள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், அது எந்தளவுக்குச் சாத்தியமானது என்பது தொடர்பில் சந்தேகங்களே நிலவுகின்ற நிலையில், எமது மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வாக அதாவது, 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து, படிப்படியாக முன்னேற்றம் காண வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தி வந்திருக்கின்றோம். தொடர்ந்தும் மேலும் பெற வேண்டிய அதிகாரங்களை அதாவது இரண்டாவது சபை, மேலதிக விசேட அதிகாரங்கள் போன்றவற்றையும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

இருப்பினும், இன்று வடக்கு மாகாண சபையை எடுத்துக் கொண்டால் செயற்திறன் இன்மையினால், அதன் மூலமான பலன்கள் எமது மக்களுக்குக் கிட்டாமல் உள்ளன. தற்போது வடக்குமாகாணசபையின் ஆட்சி நிர்வாகத்தை மேற்கொண்டு வருகின்ற பிரதான கட்சியினரே வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் தெரிவானது தவறானது எனக் கூறும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

நாம் வடக்கு மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தால், வடக்கு மாகாணத்தில் தேனும், பாலும் ஓட வைத்திருப்போம். எனினும், எமது மக்களது துரதிஸ்டம் காரணமாக வடக்கு மாகாண சபையானது எமது மக்களுக்கு எவ்விதமான பலனையும் பெற்றுக் கொடுக்காமல், வெறும் பதவிகளுக்கான சபையாகவே மாறிவிட்டுள்ளது.

இன்று வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை நாளுக்கு நாள் வன்முறைச் செயற்பாடுகள் அதிகரித்தே வருகின்றன. அண்மையில் சுழிபுரம் பகுதியில் ஆறு வயதுச் சிறுமியொருவர் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி இருந்தது.

அராலிப் பகுதியில் வயோதிபப் பெண்ணொருவர் கடுமையான பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு, கொள்ளைச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

அதேபோன்று யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடிப் பகுதியில் வாள்வெட்டுக் கும்பல்களின் அட்டகாசங்கள் என வடக்கு மாகாணம் – குறிப்பாக யாழ்ப்பாணம் தொடர்ந்தும் பதற்ற நிலையிலேயே இருந்து வருகின்றது.

எனவே, வடக்கில் அண்மைக் காலமாக ஏற்பட்டு வரும் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் சமூகச் சீர்கேடுகளை உடனடியாக நிறுத்தி, இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். இத்தகைய செயற்பாடுகளின் போது, சட்டம், ஒழுங்கினைப் பேணுகின்றபோது மிகுந்த அவதானத்துடனான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் சட்டம், ஒழுங்கினைப் பேணுவதற்காக எனக் கூறப்பட்டு, மேற்படி செயற்பாடுகளில் இறங்கியவர்களால் அதற்கு மாற்றமான விளைவுகளே அங்கு தோற்றுவிக்கப்பட்டு, நீண்டகால மோதல் நிலைமை ஏற்பட்டிருந்தமையை இங்கு சுட்டிக்காட்டவேண்டியுள்ளது – என்றார். (ஐ)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரத்ன, ஜனாதிபதியின் செயலாளராகக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவின் உத்தியோகப்பூர்வ டுவிட்டர் தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல அமைச்சுகளில் பணியாற்றியுள்ள செனவிரத்ன, சிரேஷ்ட நிர்வாக அதிகாரியாவார்.

ஜனாதிபதியின் செயலாளராக இருந்த ஒஸ்ரின் பெர்னான்டோ நேற்றுமுன்தினம் தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, அந்தப் பதவிக்கு செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். (முன்னர் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்) (ஐ)

## எரிபொருள் விலை உயர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி பெற்றோல் (92 ஒக்ரைன்) 145 ரூபாவாகவும் பெற்றோல் (95 ஒக்ரைன்) 155 ரூபாவாகவும் டீசல் 118 ரூபாவாகவும் சுப்பர் டீசல் 129 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டன.

எனினும் எரிபொருள்களின் விலையை அதிகரிக்க வேண்டாம் எனவும் பழைய விலைகளிலேயே அவற்றை விற்பனை செய்யுமாறும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவால் எரிபொருள்களின் விற்பனை விலை தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்றுக் காலை அறிவிக்கவில்லை. எனினும் நேற்று முற்பகல் 11 மணியளவில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் உத்தியோகபூர்வ விலைகள் அறிவிக்கப்பட்டன.

அதன்படி பெற்றோல் (92 ஒக்ரைன்) 137 ரூபாவாகவும் பெற்றோல் (95 ஒக்ரைன்) 148 ரூபாவாகவும் டிசல் 109 ரூபாவாகவும் சுப்பர் டிசல் 119 ரூபாவாகவும் பழைய விலைகளிலேயே பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ விலைப்பட்டியல் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டது.

இதேவேளை, எரிபொருள் விலை சூத்திரத்துக்கமைய, நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் விலையைக் குறைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவித்துள்ளார் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இவ்வாறு எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமைக்கு அமைச்சரவையில் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் அரசு பதிலளிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## பிரிட்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டோவை பிரிட்டனுக்கான இலங்கையின் தூதுவராக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

அரசில் பல முக்கிய பதவிகளை வகித்துள்ள இவர், ஜனாதிபதியின் செயலாளராகப் பதவி வகிப்பதற்கு முன்னர், கிழக்கு மாகாண ஆளுநராகக் கடமையாற்றினார்.

ஒஸ்ரின் பெர்னான்டோ நேற்றுமுன்தினம் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோட்டைக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்படவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோட்டையின் தெற்கு வாசல் பக்கமாக – பண்ணைக் கடற்கரைப் பக்கத்தில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான யாழ். கோட்டைக் காணியை இராணுவத்துக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், அங்கு இராணுவ முகாம் அமைக்கப்படக்கூடாதென வலியுறுத்தியுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ஐ-7)

## எரிபொருள் விலை உயர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் விலைகளை அதிகரித்தமையால்தான் ஜனாதிபதி தலையிட்டு அதனைத் தடுத்து நிறுத்தினார் எனத் தகவல்கள் வெளியாகிய நிலையில் நிதி அமைச்சு இவ்வாறு அறிவித்துள்ளது.

பெற்றோல் (92 ஒக்ரைன்) 8 ரூபாவாலும், பெற்றோல் (95 ஒக்ரைன்) 7 ரூபாவாலும், டீசல் 9 ரூபாவாலும் சுப்பர் டீசல் 10 ரூபாவாலும் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்படுவதாக நிதியமைச்சு அறிவித்தது.

எனினும் இந்த விலை அதிகரிப்பை நடைமுறைப்படுத்த வேண்டாம் எனப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு ஜனாதிபதி நேற்று காலை கட்டளை வழங்கினார்.

இந்த நிலையில் எரிபொருள்களின் விலை அதிகரிப்பு தொடர்பில் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறும் அமைச்சரவையில் தீர்மானிக்கப்படும் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நிதி அமைச்சு, பெற்றோலியவளங்கள் அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்களை உள்ளடக்கிய எரிபொருள் விலைச்சூத்திரத்தை நடைமுறைப்படுத்தும் குழுவுக்கு எரிபொருள்களின் விலைகளில் மாற்றம் செய்யும் அதிகாரம் அமைச்சரவையால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று மாகாணசபைத்தேர்தல் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கொண்டுவரப் பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

புதிய தேர்தல் முறை சிறுபான்மையினருக்கு அநீதி இழைக்கும் வகையில் அமைந்துள்ளதால் அதை ஓரமாக ஒதுக்கி வைத்துவிட்டு பழைய முறையில் மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும்.

இலங்கையில் இன்னும் சாதகமானதொரு தேர்தல் முறையை தெரிவு செய்ய முடியாதுள்ளது. எத்தகைய தேர்தல் முறைமை அவசியம் என்பது இன்றுவரை பரீசீலனை மட்டத்திலேயே இருக்கின்றது. இதன்மூலம் இலங்கை தேர்தல் முறைமையைப் பரீசிலிக்கும் ஆய்வுகூடமாக மாறியுள்ளது என்றே கூற வேண்டும்.

அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தேர்தல் முறையால் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் எதிர்மறையான விடயங்கள் நீங்குமென எதிர்பார்க்கப்பட்டாலும் அது நாட்டின் நிலைமையை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது.

எனவே பழைய முறையிலேயே தேர்தலை நடத்துமாறு கேட்டுக்கொள்வதுடன், இதன் மூலம் தான் எமக்கான தீர்வு கிடைக்குமென நாம் எதிர்பார்க்கின்றோம் – என்றார். (ஐ)

## விஜயகலாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்துமபண்டார ஆகிய நால்வர் அடங்கிய குழுவே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அரச நிகழ்வில் உரையாற்றிய விஜயகலா மகேஸ்வரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைக்கு மாறாக அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார் என்ற அடிப்படையிலேயே கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் உட்படுத்தப்பட்டுள்ளார். (ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்துக்கு வந்து விளக்கமளிக்க வேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், உள்நாட்டு ஊடகங்களைப் போன்று சர்வதேச ஊடகங்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் ஒருபோதும் ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப் போவதில்லை. எனினும், நியூயோர்க் ரைம்ஸ் ஊடகத்தின் மீதும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமைக்கு என்ன செய்வது?

உள்நாட்டு ஊடகங்களுக்கு மாத்திரமின்றி நியூயோர்க்ரைம்ஸ் பத்திரிகை ஆசிரியருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. நியூயோர்க் ரைம்ஸ் செய்திக்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்தவிடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த நாடாளுமன்றத்துக்கு வந்து விளக்கமளிக்கவேண்டும் – என்றார். (ஐ)

## பழைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தல் நடத்துவதற்கு தாமத நிலை இருப்பதைக் காரணம் காட்டி பழைய தேர்தல் முறைமைக்குச் செல்வது அவசியமில்லை. அவ்வாறு சென்றாலும் அது நாட்டு மக்களுக்குச் செய்யும் துரோகமாகவே பார்க்கப்படும்.

அத்துடன் பழைய தேர்தல் முறையானது மோசடிமிக்கதோர் முறையாகும். புதிய தேர்தல் முறைமையினால் எந்த இனத்துக்கும் கட்சிக்கும் அநீதி ஏற்படாது.

அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்தால் எல்லை நிர்ணய செயற்பாடுகளை ஒரு மாதத்தில் முடிப்பதுடன் உடனடியாகவே தேர்தலுக்குச் செல்லமுடியும்.

சிறுபான்மையினத்தின் தலைவர்கள் புதிய முறைமைக்கு வாக்களித்துவிட்டுத் தற்போது இந்த முறைமை சரியில்லை என்று விமர்சிக்கின்றனர். அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூட கைதூக்கித் தனது ஆதரவைத் தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது அவர்கள் இது தொடர்பாக விமர்சனங்களை மட்டுமே செய்வதுடன், அரசுக்கான எந்தவொரு ஆலோசனையோ அல்லது மாற்று வழிமுறைகளையோ கூறுவதில்லை – என்றார். (ஐ)

# தென்னாபிரிக்கா டெஸ்ட்; இலங்கை அணி அறிவிப்பு

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி, இலங்கையுடன் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், ஒரேயொரு 20/20 கொண்ட போட்டித் தொடரில் விளையாடவுள்ளது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டியாக் அமையவுள்ள டெஸ்ட் போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில், இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான 16 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த டெஸ்ட் தொடரிலும் இலங்கை அணியை வழிநடத்தும் பொறுப்பு தினேஷ் சந்திமாலுக்கே வழங்கப்பட்டுள்ளது. சந்திமால் போட்டி இடைநிறுத்தல் புள்ளிகளைப் பெறுவராயின் அவருக்குத் தென்னாபிரிக்க அணியுடனான இந்த டெஸ்ட் தொடரிலும் அதனை அடுத்துவ்ரும் இன்னும் சில போட்டிகளிலும் விளையாட முடியாது போகலாம்.

எனவே, சந்திமால் போட்டித் தடையைப் பெறும் நிலையில் இலங்கை அணியைத் தென்னாபிரிக்காவுடனான இந்த டெஸ்ட் தொடரில் அனுபவமிக்க வேகப்பந்து வீச்சாளரான சுரங்க லக்மால் வழிநடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

16 பேர் கொண்ட இலங்கை அணி விவரம்:

தினேஷ் சந்திமால், சுராங்க லக்மால், அஞ்செலோ மத்தியுஸ், திமுத் கருணாரத்ன, குசல் மெண்டிஸ், தனுஷ்க குணதிலக்க, தனஞ்சய டி சில்வா, ரொஷேன் சில்வா, நிரோஷன் டிக்வெல்ல, குசல் ஜனித் பெரேரா (உடற்தகுதி சரியாகும் பட்சத்தில்), ரங்கன ஹேரத் (உடற்தகுதி சரியாகும் பட்சத்தில்), தில்ருவான் பெரேரா, அகில தனஞ்சய, லக்ஷான் சந்தகன், லஹிரு குமார, கசுன் ராஜித.

# நடுவரை விமர்சித்தார் மரடோனா; கால்பந்து சம்மேளனம் கண்டனம்



கால்பந்து அரங்கில் புகழ்பூத்த வீரரான ஆர்ஜென்ரீனக் கால்பந்து அணியின் முன்னாள் வீரரான டியாகோ மரடோனாவுக்கு, சர்வதேசக் கால்பந்து சம்மேளனம் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

காலிறுதிப் போட்டியில், நடுவருக்கு எதிரான கருத்தைக் கூறி மரடோனா சர்ச்சையில் சிக்கிக் கொண்டுள்ளார். இந்நிலையிலேயே சர்வதேச கால்பந்து சம்மேளனம் கண்டனம் தெரிவித்துள்ளது.

உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரில், இங்கிலாந்து மற்றும் கொலம்பியா அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்றுப் போட்டி, வழக்கமான மற்றும் கூடுதல் நேர முடிவில் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தது.

இதையடுத்து கடைபிடிக்கப்பட்ட சமநிலை உடைப்பு உதைத் முறையில் இங்கிலாந்து அணி :3 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவைத் தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறியது.

இந்தப் போட்டியில், நடுவர் ஜிஜெர் ஒருதலைபட்சமாக நடந்து கொண்டார். அவரது சில முடிவுகள் இங்கிலாந்துக்குச் சாதகமாக இருந்தன என்று கொலம் பியா அணியின் தலைவர் ரரீடமெல் பால்காவ் சாடியிருந்தார்.

இதற்கு அவருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த ஆர்ஜென்ரீனக் கால்பந்து ஜாம்பவான் மரடோனா, 'இங்கிலாந்து நினைவுகூரத்தக்க ஒரு வழிப்பறியைச் செய்து விட்டது' என்று விமர்சித்தார்.

இங்கிலாந்து கால்பந்து அணியின் தலைவர் ஹரி கேன், கொலம்பியா வீரர் கார்லஸ் சாஞ்சசை பவுல் செய்ததற்காக கொலம்பியாவுக்குப் பெனால்டி வாய்ப்பு வழங்கியிருக்க வேண்டும் என்பது மரடோனாவின் எண்ணமாகும். 'இங்கு ஒரு 'ஜென்டில் மேன்' தீர்ப்பளிக்கிறார். அவர் தான் போட்டி நடுவர். அவரை போன்ற 'நேர்மையான நடுவர்' கூகுளில் தேடிப்பார்த்தாலும் கிடைக்கமாட்டார். அந்த நடுவர் ஜிஜெர் ஒரு அமெரிக்கர். என்னவொரு எதிர்பாராத பொருத்தம்' என்றும் கேலியாக கூறியிருந்தார்.

இந்நிலையில், நடுவருக்கு எதிரான மரடோனாவின் கருத்து முற்றிலும் நியாயமற்றது என சர்வதேச கால்பந்து சம்மேளனம் கூறியிருந்தது. இதையடுத்து தனது கருத்துக்கு மரடோனா வருத்தம் தெரிவித்துள்ளார்.



# இந்திய பந்துவீச்சாளர்களின் விநோத யுக்தியினால் சர்ச்சை

இந்திய பந்துவீச்சாளர்கள் பந்துவீசுவதற்காக ஓடிவந்த பின்னர் இறுதி நிமிடத்தில் பந்து வீசுவதை நிறுத்திக் கொள்வது குறித்து இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் டேவிட் வில்லி கேள்வி எழுப்பியுள்ளார்.

முதலாவது 20/20 போட்டியில் புவனேஸ்வர் குமாரும், குல்தீவ் யாதவும் இவ்வாறு செயற்பட்டிருந்தனர். பந்து வீசுவதற்காக ஓடி வந்த பின்னர் இறுதி நிமிடத்தில் அவர்கள் பந்து வீசுவதை நிறுத்திக்கொண்டனர்.

பத்தாவது ஓவரில் குல்தீப் யாதவ் இரண்டு முறை பந்து வீசுவதற்காக ஓடிய பின்னர் பந்து வீசுவதை நிறுத்தினார்.

இரண்டாவது தடவை அவர் அவ்வாறு செய்த வேளை பட்லரும் ஹேல்சும் நடுவரிடம் முறையிட்டிருந்தனர்.

இங்கிலாந்து இனிங்சின் இறுதி பந்தில் புவனேஸ்வர் குமாரும் அவ்வாறு செய்தார். இதன் காரணமாக புவனேஸ்வர் குமாருக்கும் வில்லிக்கும் இடையில் சிறிய முறுகல் நிலை ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது

இதனை விமர்சித்துள்ள வில்லி இது அநாவசியமற்ற நடவடிக்கை. கிரிக்கெட்டின் அடிப்படைகளுக்கு முரணானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் விதிமுறைகள் என்ன சொல்கின்றன என்பது எனக்குத் தெரியாது ஆனால் இதனை நான் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் அவர் கூறினார்.

# ரஷ்ய அணிக்கு வரவேற்பு




உலகக்கிண்ண கால்பந்துத் தொடரின் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ள ரஷ்யா அணியினர், போட்டி நடைபெறும் சோச்சியை வந்தடைந்துள்ளனர்.

ரஷ்யாவில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரின் காலிறுதிப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இன்று நடைபெறும் காலிறுதி போட்டியின் முதல் போட்டியில், சுவீடன் அணியும் இங்கிலாந்து அணியும் மோதுகின்ற அதேவேளை, இரண்டாவது போட்டியில் ரஷ்யா மற்றும் குரேஷியா அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இந்நிலையில், சோச்சியை வந்தடைந்த ரஷ்ய வீரர்களுக்கு அங்கு ஒன்றுக்கூடியிருந்த இரசிகர்கள் உற்சாக வரவேற்பளித்துள்ளனர்.

உலகக்கிண்ணக் கால்பந்து தொடரில், ரஷ்யா அணி 'ஏ' பிரிவில் இடம்பெற்றிருந்தது. இதில் உருகுவே, எகிப்து, சவுதி அரேபியா அணிகள் இடம்பெற்றிருந்தன.

இதில் மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்று 9 புள்ளிகளுடன் உருகுவே அணியும், மூன்றில் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று 6 புள்ளிகளுடன் ரஷ்யா அணியும் அடுத்த சுற்றான வெளியேற்று சுற்றுக்கு முன்னேறின.

வெளியேற்று சுற்றில் உருகுவே அணி, போர்த்துக்கல் அணியையும், ரஷ்யா அணி, ஸ்பெய்ன் அணியையும் எதிர்கொண்டன.

மிகவும் பரபரப்பாக அரங்கேறிய வெளியேற்றுச் சுற்று போட்டியில், சமநிலை உடைப்பு உதை மூலம் முடிவு ஏற்படும் நிலைக்கு ஸ்பெய்னை இழுத்துச் சென்ற ரஷ்யா, 4:3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று, முதல் முறையாக காலிறுதிக்கு முன்னேறியது.

# மூன்றாவது சுற்றுக்கு நடால்



ரென்னிஸ் உலகில் 141 ஆண்டுகள் பாரம்பரியம் கொண்டதும், கௌரவமிக்கதுமான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர், தற்போது லண்டனில் நடைபெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இரண்டாவது சுற்றுப் போட்டியில் ஸ்பெய்னின் முன்னணி வீரரான ரபேல் நடால், கசகஸ்தான் வீரர் மிகைல் குகுஷ்கினை எதிர்கொண்டு வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இப்போட்டியில், தனது அனுபம், ஆக்ரோம் என்பவற்றை சரியாகப் பயன்படுத்திய நடால், 6:4, 6:3, 6:4 என்ற நேர் செட்டில் குகுஷ்கினைத் தோற்கடித்துள்ளார்.

நடால், மூன்றாவது சுற்றுப் போட்டியில், ஆஸ்ரேலியாவின் அலெக்ஸ் டி மினௌரை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச சாதனையாளர்களை உருவாக்கி வருகின்றது வடக்கு

## மாகாணக் கல்வி அமைச்சர் தெரிவிப்பு

விளையாட்டுப் போட்டிகளின் மூலம் சர்வதேசச் சாதனையாளர்களை நாங்கள் உருவாக்கிக்கொண்டிருக்கிறோம் என வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமான வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப்போட்டி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒவ்வொரு மாணவனுக்கும் ஏதாவது ஒரு விளையாட்டில் ஊக்கத்தை ஏற்படுத்தும் விடயத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்களை வழிப்படுத்தவேண்டும்.

மாணவர்கள் மத்தியில் விளையாட்டுக்களை இரண்டாம் தர விடயமாக யாரும் பார்க்கக்கூடாது பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் இந்த விடயத்தில் கரிசனையுடன் செயற்படவேண்டும்.



மாணவர்களுக்குக் கல்வி எந்தளவுக்கு முக்கியமோ அந்தளவுக்கு விளையாட்டுக்களும் முக்கியம். ஒவ்வொரு மாணவனுக்கும் ஏதாவது ஒரு விளையாட்டில் ஊக்கத்தை வழங்கவேண்டும்.

எமது மாகாணத்தில் மாகாண, தேசிய மட்டங்களிலும் சர்வதேச மட்டத்திலும் சாதனை படைத்த மாணவர்களின் குடும்பநிலைகளைஎடுத்துப் பார்ப்போமானால் அவர்கள் அனைவரும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

ஆகவே அவர்கள் ஒரு கட்டத்தில் தங்களுடைய விளையாட்டுத் துறையை விட்டு வேறு துறைகளில் நாட்டம் காட்டுகின்றனர். இனி வரும் காலங்களில் அவ்வாறான நிலை இருக்கக்கூடாது.

விளையாட்டு வீரர்கள் தொடர்ந்து தங்களை வளர்த்துக்கொண்டு நாட்டுக்கும், எமது மாகாணத்துக்கும் எமது மக்களுக்கும் பெருமை சேர்க்கவேண்டும்.

விளையாட்டுப் போட்டிகளில் தேசிய, சர்வதேச சாதனையாளர்களின் எதிர்காலத்தை உத்தரவாதப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நாங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் – என்றார். (ஐ)






# காரைநகர் களபூமி திக்கரை அருள்மிகு முருகமூர்த்தி கோவில்

## திருமஞ்ச வெள்ளோட்ட சிறப்பு மலர் (07.07.2018)



(08ஆம், 09ஆம் பக்கத் தொடர்ச்சி)

### திக்கரையான் சரணம்

மஞ்சத்தில் அருள் செய்ய வருகிறான் திக்கரையான்
திக்கரை முருகனுக்கு இன்று தங்க மஞ்சத் திருவிழா
திக்கெட்டும் அடியவர்கள் பல் குறைகள் போக்க
எம் திக்கரையன் அருள்பொழிந்து அடியார்
குறைதீர்க்கும்எம்திக்கரை முருகன்பாதம்தொழுவோம்
முருகா சரணம்! திக்கரையான் சரணம்!

**சிவஞானம் கபிலன்**
**சமுர்த்தி அலுவலர்.**

### திருமஞ்சத்தால் பெரு மகிழ்ச்சி

காரைநகர் களபூமி திக்கரை என்னும் குறுச்சியில் கருணை மிகு கந்தசுவாமிக்கு ஒரு திருமஞ்சம் அமைக்கப் பெற்றமையை அறிந்து பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். கலை உள்ளமும், கருணை உள்ளமும் கொண்டவருமான C.S.K. சிவபாதசுந்தரம் அவர்களும், S.V. முருகேசு அவர்களும் முருகன் அடியார்களின் பங்களிப்பாலும் இத்திருமஞ்ச நிகழ்வு வெள்ளோட்ட நாளிதழாக பிரசுரமாகின்றமை மிகவும் சிறப்பானதாகும். அத்துடன் நாம் அறியத்தக்கதாக காரைநகரில் எந்தவோர் ஆலயத்திலும் மஞ்சம் என்பது இல்லை. ஆதலால், இந்த ஆலயத்தில் மஞ்சம் என்பது அமையப்பெற்றது பெரும் சிறப்பானதாகும். அத்துடன், இந்த ஆலயத்தில் இத் திருமஞ்சத்தை காரைநகரைச் சேர்ந்த ஆசாரியார் விஸ்வப்பிரம்மஸ்ரீ நடராஜா சிவபாலனின் கைவண்ணத்தில் உருவானமை மேன்மேலும் எமது ஊரின் கலை கலாசாரத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன், அந்த முருகனுக்கும் எமக்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்பு உண்டு என்பதை நாமும் உங்களுடன் ஒருவராக மகிழ்ச்சி அடைவதுடன் இத் திருமஞ்சம் பவணிமூலம் எல்லோரும் எல் லாமும் பெற்று திக்கரை முருகப்பெருமானின் ஆசியுடன் எமது ஆசியையும் வழங்குகின்றேன். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

**சிவஸ்ரீ ஈஸ்வரக்குருக்கள்**
பிரதமகுரு,
திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம்

### கந்தனின் அருள் கிடைக்கட்டும்

காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி கோயில் திருமஞ்ச வெள்ளோட்ட திருநாளில் வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன். சைவமும் தமிழும் தழைத்தோங்கிய காரைநகரில் திக்கரை எனும் பதியில் வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப்பெருமானுக்கு திரு S.V.முருகேசு மற்றும் திரு C.S.K சிவபாதசுந்தரம் ஆகியோரின் பெரும் நிதி உதவியுடனும் ஏனைய சுட்டியர் பரம்பரையைச் சேர்ந்த அடியவர்களின் நிதிப் பங்களிப்புடன் அழகிய சிற்ப வேலைப்பாடு கொண்ட திருமஞ்சத்தை அமைத்துள்ளனர். அவ்வகையில் திருமஞ்சத்தை அழகுற நிர்மாணித்த சிற்பக் கலைஞர் விஸ்வபிரம்மஸ்ரீ .நா.சிவபாலன் அவர்களையும் வாழ்த்துவதோடு நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைபெற கலியுகவரதனாகிய கந்தனின் அருள் கிடைக்கப் பிரார்த்தித்து எனது வாழ்த்தையும் கூறி அமைகின்றேன்.

**திரு.ச.பாலச்சந்திரன்**
**அறங்காவலர்**
**பாலாவோடை ஸ்ரீகுறிஞ்சாக்குளி**
**முத்துமாரியம்மன்**
**தேவஸ்தானம்.**

### திக்கரை முருகனுக்கு திருமஞ்சம்

கார்வழங்க நெல் விளையும் களபூமிப்பதியில் பார் விளங்க வீற்றிருக்கும் பார்வதியின் பாலகனின் திருமஞ்சம் ஊர் சேர்ந்து வடம் பிடித்து இழுக்கின்ற வெள்ளோட்டம் காணும் திருநாள் இன்றாகும்.

மஞ்சம் என்பதன் நேரடிப்பொருள் படுக்கை என்பதாகும். இறைவன் அமைதியாக அமர்ந்து அருள் பாலிக்க உதவும் ஓர் ஊடகமாக இம்மஞ்சத்தை நம்மவர்கள் கொள்வர். தேர் போன்ற வடிவத்தில் அமைந்து கவின் கலை வடிவங்களையும் வாழ்வியல் தத்துவங்களையும் எடுத்தியம்புகின்ற கலை அம்சத்துடன் எம் யாழ்ப்பாணத்தவர்களால் தமிழ்க்கடவுளாம் முருகனுக்கு உருவகித்த ஒரு வடிவமே திருமஞ்சமாகும்.

ஐந்தாம் திருவிழா உபயகாரர்களால் திக்கரை முருகனுக்குத் திருமஞ்சம் கோடி ரூபா பெறுமதியில் அமைக்கப்பெற்று இன்று அதற்கான வெள்ளோட்டமும் நடைபெற திக்கரை முருகன் நல்லருள் புரிந்துள்ளான். அவனருளாலே அவன் தாள் வணங்கி சிந்தை மகிழும் இக் காட்சிதனைக் காணும் பாக்கியம் எமக்குக் கிட்டியுள்ளது.

**கு.சிவஞானசுந்தரம்**
**இலங்கை வங்கி**
**வவுனியா.**

### சரவணத்து தாமரையில் தமிழாய் பூத்தவன் திக்கரையில் திருமஞ்சமேறுகின்றான்

தமிழ் வடிவாய்வந்த திக்கரை முருகன் போற்றி
தமிழ் குடியை காக்கின்ற இறைவா போற்றி
உமையென்றும் உளம் மறவா உயிரே போற்றி
ஓம் என்ற மந்திரத்தின் உணர்வே போற்றி
இமைத்திடும் முன் எம் கவலை தீர்ப்பாய் போற்றி
எழில் மஞ்சத்தில் இவர்ந்து வரும் தலைவா போற்றி
தமிழ்க்கவிதை தனிற் பிறந்த இறைவா போற்றி
தனைவணங்கும் யாவர்க்கும் அருள்வாய் போற்றி
தமிழுக்கோர் தெய்வமென முருகா வந்தாய் தரணிக்கோர்
இறையாக கந்தா நின்றாய்
உமையவளின் திருமகனாய் உலகம் கண்டாய்
ஓங்காரப்பொருள் அனைத்தும் உளத்தில் கொண்டாய்
அமிழ்தமெனும் தமிழுக்கோர் அழகைச் சேர்த்தாய்
அழகுக்கு அழகாக திக்கரையில் எழுந்தாய்
தமை நத்தும் எளியவர்க்குத் தாயாய் வந்தாய்
சரவணத்து தாமரையில் தமிழாய் பூத்தாய்
வர்ணனைக் கலாநிதி

**மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தன் M.A.**
(சைவசித்தாந்தம்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.07.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.